S.M.Fernando
OPTICIANS
SIGHT TESTED PRESCRIPTIONS
ACCURATELY DISPENSED
580. HOSPITAL ROAD,
NEAR BANK OF CEYLON
JAFFNA.

பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

கண் வைத்திய
நிபுணர்களினால்
சிபார்சு செய்யும் கண்ணாடி
களைச் சரியாகக்
கொடுப்பவர்கள்.
எஸ்.எம்.பெர்ணண்டோ
580, ஆஸ்பத்திரி வீதி,
இலங்கை வங்கி அருகாமை
யாழ்ப்பாணம்.

# உதயன்

விலை ரூபா 3-50

சுடர்: 5 சுக்கில ஆண்டு பங்குனி மீ 09 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1410 ஷஃபான் பிறை 24 (22-03-1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 40

## ஆறாவது திருத்தத்தை நீக்குவதற்கு

# நிபந்தனையுடன் ஆதரவு தர

# முஸ்லிம் காங்கிரஸ் இணக்கம்

### சமூக, பொருளாதார, அரசியல் பாதுகாப்பு உத்தரவாதம் தேவையாம்

கொழும்பு, மார்ச். 22

அரசமைப்பின் ஆறாவது திருத்தத்தை நீக்குவதற்கு நிபந்தனையுடன் ஆதரவு தர இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் இணக்கம் தெரிவித்திருக்கிறது.

முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளர் ஜனாப் சேகு இஸ்ஸதீன் நேற்று உதயனுக்கு இத்தகவலைத் தெரிவித்தார்.

*வடக்கு — கிழக்கில் வாழும் முஸ்லிம்களின் அரசியல், பொருளாதார, சமூகவிடயங்களில் அரசாங்கமும், விடுதலைப்புலிகளும் பாதுகாப்பு உத்தரவாதம் அளிப்பதற்கான உறுதிமொழியை வழங்கும் பட்சத்தில் —*

*நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்படும் அரசமைப்பின் ஆறாவது திருத்தத்தை நீக்குவதற்கான பிரேரணைக்கு முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவளிக்கும் என்றார் அவர்.*

ஆறாவது திருத்தம் நீக்கப்படுவதை முஸ்லிம் காங்கிரஸ் எதிர்க்கும் என முன்னர் கட்சியின் சார்பில் அறிக்கை வெளியிடப்பட்டிருந்தது தெரிந்ததே.

இந்தவிடயத்தில் கட்சியின் புதிய நிலைப்பாடு குறித்து ஜனாப் இஸ்ஸதீன் நேற்று உதயனுக்குத் தகவல் தெரிவித்தார்.

(7 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். நகரில் சம்பத் வங்கி?

கொழும்பு, மார்ச் 22

கொழும்பில் பிரபலமாகியிருக்கும் சம்பத் வங்கி லிமிட்டெட் யாழ்ப்பாணத்திலும் கிளை ஒன்றைத் திறப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டிருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

## சபையில் இன்று

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாத காலம் நீடிப்பதற்கான பிரேரணை மீது இன்று நாடாளு மன்றத்தில் விவாதம் நடைபெற இருக்கிறது. (உ-2)

## காங்கேசன்-கீரிமலை வீதி பாவனைக்கு!

காங்கேசன்துறை, மார்ச் 22

கடந்த 4 வருடங்களாக மூடப்பட்டிருந்த காங்கேசன்துறை—கீரிமலை வீதி நேற்று பொது மக்களின் பாவனைக்காகத் திறந்து விடப்பட்டது.

இந்திய அமைதிப்படையினர் விலகிச் சென்றதை அடுத்தே இப் பாதை திறக்கப்பட்டது.

இதே வேளை ஸ்ரீலங்கா இராணுவத்தினர் ஹாபர்வியூ ஹோட்டலை காலி செய்துவிட்டு தற்சமயம் விகாரையில் தங்கியுள்ளார்கள் (ஒ—68)

## புலிகளின் பொதுக்கூட்டம் இன்று வவுனியாவில்!

### மாத்தயா, யோகி, காசி உரையாற்றுவர்

வவுனியா, மார்ச் 22

வவுனியா தமிழ் மகாவித்தியாலயத்தில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெறும்.

இதற்கான ஏற்பாடுகள் பரந்தளவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இக்கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணித் தலைவர் கோ. மகேந்திரராசா (மாத்தயா), செயலாளர் திரு.யோகரட்ணம், யோகி, கவிஞர் காசி ஆனந்தன் ஆகியோர் உரையாற்றுவார்கள்.

மக்கள் முன்னணியின் தலைவர்கள் வவுனியா மாவட்டத்தில் கலந்துகொள்ளும் முதலாவது பொதுக்கூட்டம் இது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-164)

## இந்திய ராணுவ ஆஸ்பத்திரி திருமலையில் மூடப்பட்டது

கொழும்பு, மார்ச் 22

திருகோணமலை சீனன்குடா, "கிளபன்பேர்க்" பகுதியில் அமைக்கப்பட்டிருந்த இந்தியப் படையின் இராணுவ ஆஸ்பத்திரி நேற்று மூடப்பட்டது.

இந்தியப் படையின் இறுதி அணி திருமலையிலிருந்து நாளை மறுதினம் வெளியேற இருப்பது தெரிந்ததே. அதற்கு முன்னேற்பாடாகவே ஆஸ்பத்திரி மூடப்பட்டது. (உ)

### மட்டக்களப்பில் நேற்று

## கல்வித் திணைக்கள ஊழியர் திடீர் வெளிநடப்பு!

கொழும்பு, மார்ச் 22

மட்டக்களப்பு கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த சுமார் 300 ஊழியர்கள் நேற்று வேலை நேரத்தில் வெளிநடப்புச் செய்தனர்.

சம்பளத்துடன் வழங்கப்படவேண்டிய ஊக்குவிப்பு அலவன்ஸ் இதுவரை தமக்கு வழங்கப்படாததை ஆட்சேபித்தே அவர்கள் வெளிநடப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

ஏனைய திணைக்களங்களைச்சேர்ந்த ஊழியர்களுக்கு சுமார் மூன்று மாதங்களுக்கு முன்னரே இந்தக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ)

## ஆசிரியர் நியமனம் வழங்க விசித்திரமான நிபந்தனை

யாழ்ப்பாணம், மார்ச் 22

முல்லைத்தீவு கல்வி மாவட்டத்தில் பட்டதாரி பயிற்சி ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டுள்ளோருக்கு நியமனம் வழங்கப்படுவதற்கு முன்னர் விசித்திரமான நிபந்தனை ஒன்று விதிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

வடக்கு, கிழக்கு மாகாண சபை கல்வி செயலாளரின் தகுந்த அறிவுறுத்தல் கிடைக்கும் வரை முல்லைத்தீவு கல்விப் பணிப்பாளரிடமிருந்து எதுவித சம்பளத்தையோ, அல்லது முற்பணத்தையோ, வேறு சலுகைகளையோ கோரமாட்டேன் என உறுதிப்படுத்தும் இணக்க கடித

(7ஆம் பக்கம் பார்க்க)

## விடைத் தாள்கள் மீளாய்வு; இன்றுமுதல் விண்ணப்பிக்கலாம்

கொழும்பு, மார்ச் 22

ஜி. சி. ஈ. உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களை மீளாய்வு செய்வதற்கான விண்ணப்பங்களை பரீட்சைத் திணைக்களம் இன்று (வியாழன்) முதல் ஏப்ரல் மாதம் ஆறாம் திகதி வரை ஏற்றுக்கொள்ளும்.

ஒவ்வொரு பாடத்திற்கும் உரிய விடைத்தாளை மீளாய்வு செய்ய ஐம்பது ரூபா கட்டணம் அறவிடப்படும்.

பரீட்சை விடைத்தாள்கள் மறுபரிசீலனை செய்யப்பட்ட பின்னரே பரீட்சையின் இறுதி முடிவுகள் வெளியிடப்படவுள்ளன. (ஒ-எ)

## வவுனியாவில் கிராமம் தோறும் அன்னை பூபதி நினைவு நிகழ்ச்சிகள்

வவுனியா, மார்ச் 22

உண்ணா நோன்பிருந்து உயிர் நீத்த அன்னை பூபதியின் நினைவாக வவுனியா மாவட்டத்திலும் பல எழுச்சி மிகு நிகழ்ச்சிகள் இடம்பெற்று வருகின்றன.

வவுனியா நகரம் உட்பட கிராமப்புறங்கள் எங்கும் அவரது நிழற்படங்கள் வைக்கப்பட்டு தோரணம் கட்டி, வாழைமரங்கள் நட்டு அஞ்சலிக் கூட்டங்களும் மௌனாஞ்சலி நிகழ்ச்சிகளும் நடைபெற்று வருகின்றன.

புலிகளின் மக்கள் முன்னணி பிரமுகர்கள், ஊர்ப் பிரமுகர்கள் அன்னையின் அளப்பரிய தியாகத்தை நினைவு கூரும் வகையில் சொற்பொழிவுகளை நிகழ்த்தி வருகின்றனர்.

"எமது மக்கள் இன்னல்கள், இந்திய இராணுவத்தினரின் நடவடிக்கைகளுக்கும் கெடுபிடிகளுக்கும் மத்தியில் எமது இனத்தினதும் தேசத்தினதும் விடுதலைக்காக அன்னை பூபதி மேற்கொண்ட உண்ணாவிரதம் மிகவும் உன்னதமான தியாகமாகும். காலமறிந்து செய்யப்பட்ட அந்த மகத்தான தியாகம் காலம் காலமாக நினைவு கூரத்தக்கது.

வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தில் இடம்பெற்ற அன்னை பூபதியின் நினைவஞ்சலிக் கூட்டத்தில் பேசிய வவுனியா மாவட்ட விடுதலைப் புலிகள் அரசியல்

(7ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



அப்ப... ஆளுநர்பாடு பெருந் திண்டாட்டம் தான் ...!

# முதல்வர் பதவி தராவிடில் ஆளுநர் மீது வழக்கு!

### முஸ்லிம் காங்கிரஸ் தவிசாளர் மிரட்டல்

கொழும்பு, மார்ச் 22

வடக்கு, கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சராகத் தன்னை நியமிப்பதற்கு மாகாண ஆளுநர் இணக்கம் தெரிவிக்காது விட்டால் அதற்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப் போவதாக மாகாணசபையின் எதிர்க்கட்சித் தலைவர் ஜனாப். சேகு இஸ்ஸதீன் தெரிவித்திருக்கிறார்.

இதேவேளை—

தன்னை முதலமைச்சராக நியமிக்கும்படி ஜனாப். சேகு இஸ்ஸதீன் மாகாண ஆளுநர் ஜெனரல் நளின் செனிவிரத்னவுக்கு எழுதிய கடிதம் ஒன்றில் கேட்டிருக்கிறார்.

முதலமைச்சர் பதவியைத் துறந்துவிட்டு திரு. வரதராஜப்பெருமாள் நாட்டை விட்டு வெளியேறிவிட்டார். அதனால் காலியாக உள்ள முதலமைச்சர் பதவிக்குத் தன்னை நியமிக்க வேண்டும் என்று ஜனாப். சேகு இஸ்ஸதீன் கடிதத்தில் தெரிவித்திருக்கிறார்.

நான்கு பேர் கொண்ட மாகாண அமைச்சரவையில் இடம்பெறுபவர்களின் பெயர் விவரங்களையும் ஜனாப்.சேகு இஸ்ஸதீன் தனது கடிதத்து

(7 ஆம் பக்கம் பார்க்க)

### சுப நேரம்

22 – 3 –1990

வியாழக் கிழமை பங்குனி 9

சுபநேரம்:

7–47 முதல் 9–17 வரை

இராகுகாலம்

01–47 முதல் 03–17 வரை

### பிரேமாவின் அறிவிப்பு:

## இஸ்ரவேல் அரசு கவலை; பாலஸ்தீனம் மகிழ்ச்சி!

ஜெரூசலம், மார்ச் 22

ராஜரீக உறவை முற்றாகத் துண்டித்துக்கொள்வது என்ற இலங்கையின் முடிவு குறித்து இஸ்ரவேல் அரசு நேற்று கவலையும் ஏமாற்றமும் தெரிவித்தது.

கொழும்பு, அமெரிக்கத் தூதரகத்தில் இயங்கிவந்த இஸ்ரவேல் நலன்புரிப்பிரிவை மூடிவிடும்படி இலங்கை அரசு உத்தரவிட்டதன் நோக்கம் தனக்குப் புரியவில்லையென்றும் இஸ்ரவேல் நேற்று அறிவித்தது.

இதனிடையில் இஸ்ரவேலுடனான தொடர்புகளைத் துண்டிக்கும் இலங்கை அரசின் முடிவுக்கு பலஸ்தீன விடுதலை இயக்கம் பாராட்டும் மகிழ்ச்சியும் தெரிவித்துள்ளது. (ஒ-எ)

### திருமலையில் இருதரப்பினரும்

## ஆயுதங்களுடன் நடமாட்டம் இரவில் தவிர்க்க முடிவு!

கொழும்பு, மார்ச் 22

திருகோணமலை மாவட்டத்தில் இரவு நேரங்களில் ஆயுதபாணிகளாக நடமாடுவதைத் தவிர்த்துக்கொள்வது என்று இலங்கை அரசின் ஆயுதப்படையினரும் தமிழீழவிடுதலைப் புலிகள் இயக்கத்தினரும் பரஸ்பரம் ஒத்துக்கொண்டுள்ளனர்.

இந்த உடன்பாட்டைத் தொடர்ந்து, கடந்த ஞாயிறு முதல் இருதரப்பினரதும் இரவுநேர இராணுவ நடமாட்டங்கள் திருகோணமலை மாவட்டத்தில் நிறுத்தப்பட்டுள்ளன என்று கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கைஅரசுஆயுதப்படையினர் தங்களுடையதல்லாத

(7ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் மொழியிலும் தகுதிகாண் பரீட்சை!

கொழும்பு, மார்ச் 22

தமிழ் அரச ஊழியருக்கு என தமிழ் மொழியில் தகுதிகாண் பரீட்சை நடத்தப்படும்.

பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் அமைச்சர் திரு. யூ.பி. விஜேக்கோன் கொழும்புச் செய்தியாளர்களுக்கு இத்தகவலை வெளியிட்டார்.

முன்னர் அரச ஊழியர்கள் சிங்களத் தேர்ச்சி சம்பந்தமான தகுதிகாண் பரீட்சைக்குத் தோற்ற வேண்டியிருந்தது.

பின்னர் சிங்களத்துடன் தமிழும் அரசகரும மொழியாக்கப்பட்டதை அடுத்து சிங்களத் தேர்ச்சி பரீட்சை முறை ரத்துச் செய்யப்பட்டது.

அந்த இடத்திற்கே தற்போது தமிழில் தகுதிகாண் பரீட்சை நடத்தப்படவிருக்கிறது.

இந்த ரீதியில் முதலாவது பரீட்சை இவ்வருட இறுதிக்கு முன்னர் நடத்தப்படும் என்றும்—

இது தொடர்பாக விரைவில் நாடாளுமன்றத்தில் சட்டப் பிரேரணை கொண்டு வரப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ)

## தமிழ்ப் போராளிகளுக்கு தமிழகத்தில் இடமில்லை

### கலைஞர் திட்டவட்டமாக அறிவிப்பு

சென்னை, மார்ச் 22

இலங்கைத் தமிழ்ப் போராளிகளால் தமிழகம் அமளிக் கூடமாக மாறுவதை மாநில அரசு விரும்பவில்லை.

இப்படி முதலமைச்சர் மு. கருணாநிதி நேற்று சட்ட சபையில் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் திரு. எஸ். ஆர். ராதா (அ. இ. மு. க.) எழுப்பிய ஒழுங்குப் பிரச்சினைக்குப் பதிலளிக்கையிலேயே திரு. கருணாநிதி இதனைத் தெரிவித்தார்.

ஒரிஸாவில் தங்கவைக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை தமிழகம் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று ராதா ஒழுங்குப் பிரச்சினையின்போது கேட்டுக்கொண்டார்.

இதற்குப் பதிலளித்த திரு. கருணாநிதி, "ஒரிஸா மாநிலத்துக்கு அனுப்பப்பட்டவர்கள் தமிழ்ப் போராளிக் குழுக்

(7ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்


### விற்பனைக்கு

பாவித்த N.V. 600 நஷனல் விடியோ டெக் விற்பனைக்கு உண்டு. தொடர்பு 37, மார்டின் லேன், யாழ்ப்பாணம். (2899)

பின்வரும் 2 லொறிகளும், கார் ஒன்றும் விற்பனைக்கு உண்டு. 24 Sri 6431 B.M.C. லொறி, 24 Sri 3251 B.M.C லொறி, Car 8 Sri 3174 மொறிஸ் ஒக்ஸ்போட் Paper Cutter 24, Inehes தொடர்பு கொள்ளவும். எஸ். சுப்பிரமணியம் & கொம்பனி, 53, K.K.S. றோட், யாழ்ப்பாணம். (2897)

எங்களிடம் பாடசாலை பிள்ளைகளின் தேவைக்கான டை (Tie) விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும், நியூ வசந்தா ரெக்ஸ்ரைல்ஸ் பிறின்ரிங் சென்ரர், 248, K.K.S. றோட், யாழ்ப்பாணம். (2896)

O/L, A/L அனைத்து பாடங்களுக்கான Tutes மலிவு விலையில் (Clearence Sale) 21-3-90 முதல் 5-4-90 வரை விற்கப்படும். Bond Institutes, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி-4121)

### மலிவு விற்பனை

அப்பியாசக் கொப்பிகள் உபகரணங்கள், பன்சிச் சாமான்கள் மற்றும் பிளாஸ்டிக் பொருட்கள் வாழ்த்து மடல்கள் என்பன விற்பனைக்குண்டு. வியாபாரிகளுக்கு விஷேச கழிவு உண்டு. றூபா சென்ரர், 646, ஆஸ்பத்திரி வீதி. (இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் முன்பாக) யாழ்ப்பாணம். (12079)

### கோழிக்குஞ்சு விநியோகம்

ஒருநாள் Hyline கறுப்பு பேட்டுக் குஞ்சுகள் 23-3-90 வெள்ளிக்கிழமை விநியோகிக்கப்படும். இல. 136, ஸ்ரேசன் வீதி, யாழ்ப்பாணம். (புகையிரத நிலையத்திற்கு அருகில்) (12075)

ஒரு நாள் Golden Come பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், சேவற்குஞ்சுகள், Hyline, வெள்ளை, பிறவுண், கறுப்பு பேட்டுக்குஞ்சுகள், Hisey பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் சேவற்குஞ்சுகள், புறொயிலர் குஞ்சுகள், ஒவ்வொரு வாரமும் முன் கூட்டியே பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம். சற்குணராஜா & பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (2881)

### நாடக நூல்

O/L தமிழ்மொழி பாடத்திட்டத்தில் வானொலி நாடகமும் உள்ளது அதைக் கற்பதற்குப் பயன்படக்கூடிய இரண்டே இரண்டு நூல்கள் கெட்டிக்காரர்கள் ரூபா 25/- முதலாம்பிள்ளை ரூபா 30/- அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை எழுதியவை (12082)

### தேவை

எலக்ரோனிக் கடிகாரங்கள் திருத்துவதில் சிறந்த அனுபவம் உள்ள ஒருவர் தேவை. 20இற்கும், 30இற்கும் இடைப்பட்ட வயதுள்ளவர் விரும்பத்தக்கது. No. 653, C/o உதயன், யாழ்ப்பாணம் (சி/4125)

சமையல்காரர் சமையல் வேலை பழகுபவர்கள் உணவு பரிமாறுபவர்கள் தேவை. யாழ் சைனீஸ் றெஸ்ரோறன்ற் முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். நேரில் வரவும். (காலை 9.00 — 11.00 வரை) அல்லது விண்ணப்பிக்கவும். (12086)

பலாலி வீதி, கோண்டாவில் சந்திக்கும், வேம்படிச் சந்திக்கும் இடையில் சகல வசதிகளும் அடங்கிய வீடு வாடகை 1500/க்குள் தேவை. முற்பணம் பேசித் தீர்த்துக் கொள்ளலாம். தொடர்பு வி. இலக்கம் C/o N/o 651, மே/பா உதயன் யாழ்ப்பாணம். (2869)

### தேவை

லலிதா ஜுவல்லறி, 213, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். மேற்படி ஸ்தாபனத்தில் கடமையாற்றுவதற்கு பெண் பிள்ளைகள் தேவை. ஊழியர்களாகவும், கணக்கு பகுதிகளுக்கும் தேவைப்படுவதால் உங்கள் நற்சாட்சிப் பத்திரங்களுடனும் பெற்றோருடனும் நேரில் வரவும். யாழ் மாநகர எல்லைக்குள் வசிப்பவருக்கு முன்னுரிமை தரப்படும். நிர்வாகம். (2891)

### WANTED

Foreign returned Engineer wants to purchase a house with all modern facilities in good Locality within one mile radius from Jaffna Town Please write to 652, C/o Uthayan (2898)

### தவறிவிட்டது

711992260V இலக்கமுடைய ஏ. பிரபாகரனின் அடையாள அட்டை கே. கே. எஸ். வீதியில் தெல்லிப்பளைக்கும் யாழ்ப்பாணத்திற்குமிடையில் தவறி விட்டது கண்டெடுப்பவர்கள் புகையிரதப் பாதை அதிகாரி, (F. P. L.) புகையிரத நிலையம், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் தயவு செய்து ஒப்படைக்கவும். (2895)

### ரைப்பிங் சேவை

தமிழ், ஆங்கிலம், ரைப்பிங் மற்றும் Stencils cutting குறைந்த செலவில் ரைப்பிங் செய்து கொடுக்கப்படும். நாடுங்கள்: FUDO 39/17, மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (சி/3452)

### வகுப்புக்கள்

Radio T. V. Air-Conditioning Refregeration வயரிங், வெல்டிங், பெயிண்டிங், பிளம்பிங், மோட்டர் மெக்கானிசம் Typing, Spoken English புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன. சிறந்த செய்முறை, அறிமுறைப் பயிற்சிகளுடன் அங்கீகரிக்கப்பட்ட Diploma சான்றிதழும் வழங்கப்படும். Vispa Engineering Aid Hall 328, Navalar Road, Jaffna. (12064)


# சுகாதாரச் சீர்கேட்டுக்கு இனியும் இடம் கொடுக்க முடியாது

## கருத்தரங்கில் சுகாதார வைத்திய அதிகாரி

காங்கேசன்துறை மார்ச் 22

''எமது சமுதாயம் சுகாதாரத்தைப் பேணி வாழ்ந்தால் தான் எதிர்காலத்தில் திடகாத்திரமான சந்ததியை உருவாக்கமுடியும். கடந்த பல வருடங்களாக சுகாதார நடைமுறைகளை செயற்படுத்த முடியாமல் இருந்ததால் நோய்கள் பெருமளவில் மக்களைப் பீடித்தன. இனியும் இதற்கு இடம் கொடுக்கக்கூடாது

தெல்லிப்பழை சுகாதார பயிற்சி நிலையத்தில் இடம்பெற்ற 'உணவும் சுகாதாரமும்' பற்றிய கருத்தரங்குக்கு தலைமை வகித்து உரையாற்றிய தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி திரு. இ. தெய்வேந்திரன் இப்படிக் கூறினார்.

வலி. வடக்குப் பகுதியைச் சேர்ந்த உணவு பரிமாறும் நிலையங்களின் உரிமையாளர்கள், ஐஸ்கிறீம் விற்பனையாளர்கள் பேக்கறி உரிமையாளர்கள் போன்றோர் பங்கு பற்றிய இக்கருத்தரங்கில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது;

மக்களை பீடிக்கும் நோய்களில் 50 சத வீதமானவை உணவு, குடி தண்ணீர் போன்ற வற்றால் ஏற்படுகின்றன. அத்துடன் போஷாக்கின்மை பெரும் பிரச்சினையாக உள்ளது. கொழும்பில் விற்கமுடியாமல் தடைசெய்யப்பட்ட பல பொருட்கள் இங்கு கடத்தி வரப்பட்டு விற்பனைக்கு விடப்படுகின்றன.

தாராள இறக்குமதி கொள்கையால் தரமற்ற மருந்து வகைகள் கூட இங்கு விற்பனைக்கு வருகின்றன. நோயைக் குணப்படுத்த வேண்டிய மருந்து வகைகள் நோய்களை புதிதாக உருவாக்குகின்றன. உணவில கலப்படம் செய்வது புற்றுநோய் ஏற்பட வழிவகுக்கிறது. இனிப்பு பண்டங்களுக்கு உபயோகிக்கும் சக்கறின், புடைவைசாயம் என்பன புற்றுநோய்க்கு வழிவகுக்கின்றன.

ஆகவே இப்படியான நடவடிக்கைளும் இது போன்ற சுகாதாரக் கேடான செயற்பாடுகளும் இனிமேலும் தொடராமல் இருக்க நாம் வழி வகுக்க வேண்டும். இவற்றை தடுக்க உணவு, மருந்து வகைகள் சட்ட மூலங்களை பயன்படுத்தி சட்ட நடவடிக்கை எடுக்க முடியும். ஆனாலும் நாம் அந்தளவுக்கு போகவில்லை உங்களது ஒத்துழைப்பை கோருகிறோம்.

இப்படி அவர் கூறினார்.

யாழ் மாவட்ட உணவு, கலப்பட கண்காணிப்பு அதிகாரி திரு. த. மகாதேவன் பேசுகையில் உணவு, மருந்து வகைகளில் கலப்படம் மோசடி செய்வது பாரதூரமான குற்றமாக கருதப்படுகிறது. 1983 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட இது தொடர்பான சட்ட மூலம் வடக்கு கிழக்கில் சட்ட ஒழுங்கில் சீரில்லாமையால் செயற்படுத்தப்படவில்லை. தற்போது நிலைமை சீரடைந்துள்ளதால் இதுவிடயத்தில் நாம் கவனம்செலுத்தவேண்டியுள்ளது. என்றார்.

சுகாதரப் போதனாசிரியர் திரு. கா. வைத்தீஸ்வரன், யாழ். மேற்பார்வைசுகாதார பரிசோதகர் திரு. செல்வரத்தினம், மேற்பார்வை சுகாதார பரிசோதகர் திரு. வீ. க. சிங்கராஜா ஆகியோரும் கருத்துரை வழங்கினார்கள்.

# கி. மு. சங்கமும் ச. ச. நிலையமும் கிராமத்தின் இரண்டு கண்கள்

## சனசமூக நிலையத் திறப்பு விழாவில் உரை

யாழ்ப்பாணம் மார்ச் 22

கிராமமுன்னேற்றச் சங்கமும் சனசமூக நிலையமும் ஒரு கிராமத்தின் இரு கண்களாகும். இந்த இரண்டு பொதுஸ்தாபனங்களும சீராக இயங்கினால் மக்களுக்கு அளப்பரிய சேவைகளைச் செய்யமுடியும். இந் நிலையம் இன்றைக்கு இருபது வருடங்களுக்கு முன்பு திட்டமிடப்பட்டு இன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதை யிட்டு மகிழ்ச்சியடைகிறேன்

கந்தரோடை மேற்குப் பகுதியில் புதிய ஞானவயிரவர் சனசமூக நிலையத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில் சமாதான நீதிபதி திரு. ஆ. சி. கணேசவேல் இவ்வாறு கூறினார்.

ஆசிரியர் திரு. க. புவனேந்திரநாதன்அதிபர் திரு. த நடராசா உட்பட பலர் இக் கூட்டத்தில் உரையாற்றினார்கள். (க)

## பெறுபேறுகள் கிடைத்தன

வல்வெட்டித்துறை, மார்ச் 22

க, பொ த. (உ. த) பரீட்சைப் பெறுபேறுகள்வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரிக்கு 19.3.90 அன்று தான் கிடைத்துள்ளது. [க-160]

## மாரிதேவி உற்சவம்

வல்வெட்டித்துறை, மார்ச் 22

ஆண்டு தோறும், அருள்மிகு வல்வை முத்துமாரி அம்மன் ஆலயத்தில் நடைபெறும் மாரிதேவிஉற்சவம் இம்முறை நடைபெறுகின்றது. மாலை 6 மணிக்கு நடைபெறும் பூசையைத் தொடர்ந்து அம்பாள்திருஉலாவருவார். [க-160]


## அறிவித்தல்

சுன்னாகம் ஐயனார் கோவில் வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு 25-03-1990 ஞாயிற்றுக் கிழமை 3 மணிக்கு வியாபாரக் கடைகள் பகிர்ந்து கொடுக்கப்படும். வேண்டியவர்கள் நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

—நிர்வாகிகள்

சுன்னாகம் (சி/4077)


# பல்கலை பட்டம் பெற்றவர் வெளிநாடு செல்வது பேரிழப்பு

## பேராசிரியர் சரவணபவானந்தன் உரை

யாழ்ப்பாணம் மார்ச் 22

''பல்கலைக் கழக அனுமதி பெற்று பட்டம் பெற்ற மாணவர்களில் பலர்வெளிநாடுகளுக்கே சென்றுவிடுகிறார்கள். இது பெரும் இழப்பாகும். யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மருத்துவ பீடத்தைப் பொறுத்த அளவில் 68 விரிவுரையாளர்கள இருக்க வேண்டிய இடத்தில் 18 பேர் மாத்திரம் கடமை ஆற்றுகிறார்கள்

மானிப்பாய் மகளிர் கல்லூரியில் க. பொ. த. உயர் தர மாணவர் மன்றம் நடத்திய மதிய போசன விருந்தில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட பேராசிரியர் வைத்தியகலாநிதிஎன். சரவணபவானந்தன் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில், ''எமது பல்கலைக் கழகங்களில் உயர் கல்வியும், பட்டமும் பெறுவோர் இந் நாட்டிலேயே சேவை செய்யத் திடசங்கற்பம் பூணவேண்டும்'' என்று கூறினார்.

செல்வி ஜெயலலிதாவின் தலைமையில் நடைபெற்ற இவ் விருந்துபசாரத்தில் பொறியியலாளர் லயன் எஸ். பத்மநாதன், சட்டத்தரணி திரு. சிவ. இராஜேந்திரன், ஷப்றா நிறுவன நிர்வாகப் பணிப்பளர் திரு. இ. சரவணபவன் அவருடைய துணைவியார் ஆகியோரும் கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்டனர்.

கல்லூரி அதிபர் திருமதி எஸ். கல்யாணசுந்தரேசன் பிரதம விருந்தினரையும் கௌரவ விருந்தினரையும் வரவேற்று உரைநிகழ்த்தினார். (க)


# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



லெப். துர்க்கா

[கமலாதேவி — புதுக்குடியிருப்பு]

உதிப்பு: 07 - 04 - 1965 உயிர்ப்பு: 22 - 03 - 1988

அடி வானின் சிவப்பைக் காண
ஆர்த்தெழுந்த அலை
அந்த
சூரியனின் வருகையை கௌரவிக்க
தன்
சுவாசத்தையே நிறுத்திக் கொண்டது!

இடிபாடுகளின் கோரத்தால்
எழுச்சி கொண்ட புயல்
சுதந்திர தேவியை
சுற்றி இறுக்கிய
சிறைக் கம்பிகளை எல்லாம்
சின்னாபின்னமாக்கியது!

அடிபணிய மறுத்த
இந்த -
அக்கினிக் குஞ்சின்
சிவந்த விழிகளிலிருந்து
சீறிப் பாய்ந்த குண்டுகளால்
அந்த -
நேரு படைகளும்
நிர்மூலமாகியது!!

துர்க்கா!
உன் -
சின்னஞ்சிறிய இதயம்
சிந்திய குருதி
ஒரு -
பரந்த தேசத்தின்
பாதுகாப்பில் பங்கேற்கிறது!

உனது -
இலட்சியப் பாதையில்
ஏறிவரும் தமிழினதும்
அந்நியப் புயல்களினால்
அடிசாய மாட்டாது!
புதிய யுகத்தினை சிருஷ்டிக்க
பூகம்பமாய் புறப்படும்.

[12109]

- விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி

# கொம்பியூட்டர் வகுப்புக்கள்

**Diploma in Data Processing and Computer Programming in BASIC**

★ புதிய வகுப்புக்கள் ஆரம்பம் ★

வாரநாட்கள் 05 - 04 - 1990 9 a. m.

வார இறுதிநாட்கள் 07 - 04 - 1990 9 a. m.

Project. Filehandling உட்பட விரிவான பயிற்சிநெறி பயிற்சி முடிவில் பெறுமதிமிக்க சான்றிதழ்கள் வழங்கப்படும்.

PASCAL வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன.

சிறந்த Programmers ஆகுவதற்கு இன்றே உங்களைப் பதிவு செய்து கொள்ளுங்கள்

3 மாத BASIC Programming செய்து Filehandling Project செய்யாதவர்களுக்கும் விசேட வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.

ஒவ்வொரு மாணவரிலும் தனிப்பட்ட கவனமெடுப்பதால் குறிப்பிட்ட தொகை மாணவரே சேர்த்துக் கொள்ளப்படுவர்.

ஆறுமாத ஆங்கில வகுப்புக்கள் ஆரம்பம் 24 - 03 - 1990 9 a. m.

**கொம்பியூட்டர் சயன்ஸ் அக்கடமி**

[சி. எஸ். ஏ.]

நாவலடிலேன் திருநெல்வேலி

(திருநெல்வேலிச் சந்தியில் இருந்து கல்வியங்காடு மார்க்கமாகச் செல்லுகையில் வலது கைப்பக்கமாக இரண்டாவது ஒழுங்கை)

[2933]

# External Pharmacist Examination

**Ceylon Medical College Council**

**Colombo**

இலங்கை மருத்துவக் கல்லூரி சபை கொழும்பு நடாத்தும்

வெளி வாரி பாமசிஸ்ற் பரீட்சை

மேற்படி பரீட்சைக்குரிய 8வது பயிற்சி நெறி வகுப்புகள் 24-03-90 ஆரம்பமாகின்றன

தகைமைகள்:- க. பொ. த (சாதாரணம்) ஆங்கிலத்தில் — சித்தி விஞ்ஞான பாடம் ஒன்றில் — திறமைச் சித்தி

சிறந்த செயல் முறை பயிற்சி

- இலவச ஆங்கில வகுப்புகள்
- 25 வருட அனுபவம் உடைய தகைமை பெற்ற விரிவுரையாளர் குழு
- பயிற்சி நெறியை பூர்த்தி செய்தவர்களுக்கு டிப்ளோமா சான்றிதழும் வழங்கப்படும்.

உங்கள் பதிவுகளுக்கு:-

**North Ceylon Technical Institute**

14, St. Peter's Lane,
Hospital Road,
JAFFNA.

[சி-4123]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல்
நோக்கம் இம் மூன்றும் உடைத்து.

**பொருள்:**

எமனோ? கண்ணோ? பெண்மானோ? இந்த இளம் பெண்ணின் பார்வை இந்த மூன்றின் தன்மையும் உடையதாக இருக்கின்றது.

உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, தொலைபேசி: 2288
யாழ்ப்பாணம்.
22-03-1990 த. பெ. இலக்கம் : 25

# அன்னையின் பெருமை

மட்டக்களப்பில் உண்ணா நோன்பு இருந்து உயிர்த் தியாகம் செய்த அன்னை பூபதி கணபதிப்பிள்ளை நினைவாக தற்போது வடக்கு கிழக்குப் பகுதிகளில் நினைவுக் கூட்டங்கள் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுவருகின்றன.

★ நிபந்தனை அற்ற யுத்த நிறுத்தம்.
★ நிபந்தனை அற்ற பேச்சுவார்த்தை.

இந்த இரு கோரிக்கைகளையும் முன்வைத்து அன்னை பூபதி மட்டக்களப்பு மாமாங்கப் பிள்ளையார் கோயில் முன்றலில் 1988 மார்ச் 19 ஆம் திகதி சாகும்வரை உண்ணா நோன்பு ஆரம்பித்தார். சரியாக ஒரு மாதம் கழித்து ஏப்ரல் 19 ஆம் திகதி அவர் வீர சுவர்க்கம் அடைந்தார்.

1987 அக்டோபரில் இந்தியப்படையினர் வடக்கிலும் கிழக்கிலும் பெரும் இராணுவ நடவடிக்கைகளைக் கட்டவிழ்த்துவிட்டு அப்பகுதிகளில் தமது பிடியை இறுக்கி வைத்திருந்த சமயம் நடந்தது இந்த உண்ணா நோன்பு.

இது ஈழத்தின் அரசியல் சரித்திரத்தில் ஒரு புதிய அத்தியாயத்தைத் தோற்றுவித்திருந்தது. மட்டக்களப்புக்கு மட்டும் அன்றி தமிழீழம் முழுவதற்கும் பெருமை தேடிக் கொடுத்திருந்தது.

அன்னை பூபதி உயிர்த்தியாகம்செய்து தற்போது 2 வருடங்கள் பூர்த்தி அடைகின்றன. அவர் என்ன நோக்கங்களுக்காக உயிர்த்தியாகம் செய்தாரோ அவை தற்போது நிதர்சனமாகி வருவதைக் காணமுடிகிறது. ஆகவே அவரின் உயிர்த்தியாகம் வீணாகிவிடவில்லை.

ஒரு தமிழ்ப் பெண் தமிழ் மக்களின் நலனை முன்வைத்து அஹிம்சைப் போராட்டம் நடத்தி தனது இன்னுயிரைத் தியாகம் செய்தது தமிழர் வரலாற்றில் இதுவே முதல் தடவை.

அன்னை பூபதி ஒரு போராளி அல்லர். ஓர் அரசியல் வாதியும் அல்லர். அவர் ஒரு சாதாரண குடும்பப் பெண்.

எனினும் தனிப்பட்ட பாசங்களை மறந்து தமிழ் மக்கள் நலனுக்காக உயிர்த்தியாகம் செய்திருந்தார்.

இதன் மூலம் தாய் என்ற இடத்தில் இருந்து இந்த மண்ணின் அன்னை என்ற அந்தஸ்துக்கு இவர் தன்னை உயர்த்திக்கொண்டார்.

அவரின் நினைவாக வடக்கு கிழக்குப் பகுதிகளில் சுழற்சிமுறை உண்ணா விரதங்கள், அஞ்சலிக்கூட்டங்கள், சிலை திறப்பு வைபவங்கள் பெரும் அளவில் ஏற்பாடுசெய்யப்பட்டிருக்கின்றன.

இந்த வைபவங்களில் தமிழ்பேசம் மக்கள் பெரும் எண்ணிக்கையில் பங்குபற்றவேண்டும், அதுவே அன்னைக்கு அவர்கள் செய்யும் அஞ்சலியாக இருக்கும்.

## ஒன்றரை நிமிடங்களில் பாஸ்போர்ட்!

கொழும்பு, மார்ச் 22
விண்ணப்பத்தை கொடுத்து ஒன்றரை நிமிடங்களில் ஒருவருக்கு பாஸ்போர்ட் கிடைத்தது.

புத்தளத்தில் கடந்த மூன்று தினங்களாக இயங்கிய ஜனாதிபதியின் நடமாடும் செயலகம் இச்சாதனையைப் புரிந்தது.

பாஸ்போர்ட் கோரி பலர் நடமாடும் செயலகத்தில் விண்ணப்பங்களை சமர்ப்பித்தனர். சராசரி ஒன்றரை நிமிடங்களில் ஒவ்வொருவருக்கும் பாஸ்போர்ட் வழங்கப்பட்டது. (ஒ-எ)

## பாடசாலைகளுக்கு கம்பியூட்டர்கள்;

கொழும்பு, மார்ச் 22
ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்புக்கள் உள்ள சகல பாடசாலைகளுக்கும் ஐ.பி.எம். பெர்சனல் கம்பியூட்டர்களை இலவசமாக வழங்க கல்வி அமைச்சு முடிவு செய்துள்ளது.

நாட்டில் உள்ள ஆயிரத்து 785 பாடசாலைகளுக்கு இக் கம்பியூட்டர்கள் வழங்கப்படும்.

கட்டம் கட்டமாக மூன்றாண்டுகளில் இதன் விநியோகம் இருக்கும் என்று கல்வித் திணைக்கள உதவி இயக்குநர் நாயகம் திரு. டபிள்யு. எஸ் பெரேரா தெரிவித்தார். (ஒ-எ)

# யாழ். மாவட்டத்துக்கு கூடுதல் நிவாரணம் பெற முயற்சி

## வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநருடன் பேச்சு நடக்கும்

யாழ்ப்பாணம், மார்ச் 22
யாழ்மாவட்டத்துக்கு கூடுதல் நிவாரண உதவிகள் வழங்குவது சம்பந்தமாக புனர்வாழ்வு அமைச்சு அதிகாரி வடக்கு கிழக்கு மாகாண ஆளுநருடன் பேச்சு நடாத்த இருக்கிறார்.

வடக்கு – கிழக்குமாகாணத்துக்கான நிவாரணப் பணம் முழுவதும் மாகாணசபைக்கே அனுப்பப்பட்டுவருகிறது.

மாகாணசபையே நிதி ஒதுக்கீட்டையும், பணத்தையும் எட்டு மாவட்டங்களுக்கும் வழங்கிவருகிறது.

இதனால் கூடுதல் பாதிப்பான யாழ் மாவட்டத்துக்கு போதிய அளவு ஒதுக்கீடும் பணமும் கிடைப்பதில்லை என்று புகார் கூறப்பட்டு வந்தது.

யாழ் மாவட்டத்துக்கு கூடுதல் ஒதுக்கீட்டை வழங்குமாறு ஆளுநரிடம் தாம் கேட்கவிருப்பதாக புனர்வாழ்வு அமைச்சு செயலாளர் திரு. கே. வி.லோகேஸ்வரன் உதயனுக்கு தெரிவித்தார். (க-3)

## உள்ளூராட்சி அலுவலகம்

கொழும்புத்துறை, மார்ச்22
யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் முப்பது மாதங்களின் பின் மீண்டும் யாழ். கச்சேரியிலுள்ள விடமைப்புச் செயலகக்கட்டிடத்தில் இயங்கத் தொடங்கியுள்ளது. (க-30)

### யாழ் குடா நாட்டில்

## அன்னைபூபதி நினைவாக துக்கம் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம் மார்ச் 22
அன்னை பூபதிக்கு அனுதாபம் தெரிவித்து யாழ் குடாநாடு பூராவும் துக்கம் அனுஷ்டிக்கப் பட்டுவருகிறது.

அன்னை பூபதியின் படம் சந்திகள் தோறும் வைக்கப்பட்டு மாலை அணிவிக்கப் பட்டுள்ளது.

வாழைகள், தோரணங்கள், கமுகுகள் எங்கும் கட்டப்பட்டிருக்கின்றன. கிராமப்புறங்களில்துக்கம் அனுஷ்டிக்கப்படுகிறது.

சந்திகள் தோறும் சோக கீதங்கள் ஒலிபரபப்படுகின்றது. (க-3)

## இலங்கை வங்கிக்கு இரு மாடிக் கட்டடம்

யாழ்ப்பாணம் மார்ச் 22
யாழ் ஆஸ்பத்திரி வீதி இலங்கை வங்கி பிராந்திய அலுவலகத்துக்கு இரு மாடிக் கட்டடம் அமைக்கப்பட இருக்கிறது.

தற்சமயம் இருக்கும் வங்கியில் போதிய இடவசதி இல்லாத காரணத்தால்பல இலட்சம் ரூபா செலவில் இந்தக் கட்டடம் அமைக்கப்பட இருக்கின்றது.

இந்தக் கட்டட வேலைக்கான கேள்விகள் கோரப்பட்டுள்ளன, (ஒ-3)

## தேசிய மொழிக் கொள்கை இம்மாதம் நடைமுறைக்கு

கொழும்பு மார்ச் - 22
அரசாங்கத்தின் தேசிய மொழிக் கொள்கையும் திணைக்களங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்களுக்கு ஊழியர்களைச் சேர்க்கும் கொள்கையும் இம்மாதத்திலிருந்து நடைமுறைக்கு வருவதாக ஜனாதிபதி பிரேமதாஸா அறிவித்துள்ளார்.

இவை சம்பந்தமான நடவடிக்கைகளை உடனடியாக மேற் கொள்ளும்படி அமைச்சுகளின் செயலாளர்களையும் கூட்டுத்தாபனங்களின் தலைவர்களையும் ஜனாதிபதி பணித்தார்.

புத்தளத்தில் நடந்த ஜனாதிபதியின் நடமாடும் செயலகத்தில் அமைச்சுகளின் செயலாளர்கள் மற்றும் அதிகாரிகள் மாநாட்டில் பேசும் போது இந்த உத்தரவுகளை விடுத்தார்.

பெயர்ப்பலகைகள், தபால் தலைப்புக்கள், ஏனைய பத்திரங்கள் என்பன மும்மொழிகளிலும் தயாரிக்கப்படவேண்டும்.

அரசின் தேசிய மொழிக் கொள்கைக்கு அமைய நாட்டின் கல்விக் கொள்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

அரச மற்றும் கூட்டுத்தாபன நியமனங்கள் தகுதி, திறமை அடிப்படையில் இடம் பெறவேண்டும். இந்த அடிப்படையில் தான் பதவி உயர்வுகளும் இருக்கவேண்டும்.

சிங்களம் முதலாவது மொழி. தமிழ் இரண்டாவது மொழி.

பாடசாலைகளில் முன்றாம் வகுப்பில் இருந்து ஆங்கிலம் போதிக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது.

எம்பிக்களின் சிபார்சு கடிதத்தின் மீது நியமனங்கள் வழங்கப்படுவது உடனடியாக நிறுத்தப்படுகின்றது.

இப்படி ஜனாதிபதி சொன்னார். (இ-எ)

## இ. தொ. கா. பொன் விழா ஹட்டனில் 24, 25 இல்

நுவரெலியா, மார்ச். 22
இ.தொ.கா. ஸ்தாபிக்கப்பட்டு 50 வருடங்கள் பூர்த்தியாகும் பொன். விழாவும், 30ஆவது வருடாந்த மகாநாடு அட்டனில் 24ஆம் 25 ஆம் திகதிகளில் கொண்டாப்பட இருக்கின்றன.

மகாநாட்டு இணைப்பாளரில் ஒருவரான மத்திய மாகாண சபை உறுப்பினரும் இ. தொ. கா. உதவிச் செயலாளருமான திரு. எஸ். ராஜு ஜே. பி. இதனைத் தெரிவித்தார்.

மகாநாடு அட்டன் டன்பார் விளையாட்டு மைதானத்தில் நடைபெறும். ஊர்வலமும், காலை நிகழ்ச்சிகளும் இசை நிகழ்ச்சிகளும் ஒழுங்குசெய்யப்படுகின்றன. வாகன, சைக்கிள் ஊர்வலங்களுடன், காங்கிரஸ் சீருடையில் ஆயிரம் இளைஞர்களும் இளம் பெண்களும் அணி நடையில் நடந்து செல்லவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஹட்டன் பிரின்ஸஸ் தியேட்டர் சந்தியிலிருந்து ஆரம்பமாகும் ஊர்வலத்தில் ஜனாதிபதியும், தொழிற்சங்க தலைவர்களும், மந்திரிமார்களும் கலந்து கொள்வார்கள் என்று தெரிவிக்கபடுகின்றது. (சு-58)

## சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், மார்ச் 22
நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் மகா சங்காபிஷேகமும் அம்மன் வீதி திருஉலாவும் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8 மணி முதல் நடைபெறும். (க)

## நினைவில் இன்று

22-03-90

● டி. எஸ்.சேனநாயக்க (இலங்கையின் முதலாவது பிரதமர்) நினைவு தினம்.
பிறப்பு 20-12-1882
இறப்பு 22-3-1952

● மூதூர் முன்னாள் எம். பி. த. ஏகாம்பரம் நினைவு தினம்.

## சொற்பொழிவு

திருநெல்வேலி கிழக்கு அருள் மிகு ஸ்ரீ சிவஞான பிள்ளையார் ஆலய அலங்காரத் திருவிழா 15 ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகியுள்ளது. பத்து நாட்கள் தொடர்ந்து நடைபெறும் திருவிழாவில் தினமும் மாலை 6 மணி தொடக்கம் 7 மணி வரை நல்லைக் குரு மணியின் பிரதம சிஷ்யன் கானகதாவாரிதி வண்ணை கந்தர் மடம் பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்தசர்மா ஆசிரியர் சமய சொற்பொழிவு ஆற்றி வருகிறார், (க)

## ஜி. சி. ஈ. முடிவுகள்

பூநகரி மத்திய வித்தியாலயத்தில் 1989 ஆம் ஆண்டு ஜி. சி. ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் 89 சதவீதமானோர் சித்தி அடைந்துள்ளனர்; 67 சதவீதமானோர் பல்கலைக்கழக அனுமதி பெறும் தகமை பெற்றுள்ளனர். (க)

### வாசகர் திருமுகம்

## சங்கானை வைத்தியசாலை

சங்கானை அரசினர் வைத்தியசாலை யாழ் போதனை வைத்தியசாலையின் மேற்குப் பகுதியில் எட்டு மைல் தூரத்தில் இருக்கின்றது. இதே போன்று யாழ் போதனா வைத்தியசாலையின் வடக்குப் பகுதியில் தெல்லிப்பளை மாவட்ட வைத்தியசாலையும், கிழக்குப் பகுதியில் சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையும் அமைந்துள்ளது. ஆனால் சங்கானை வைத்தியசாலை ஆரம்ப காலம் தொடக்கம் சுற்றியற்கூறு (Py) தரத்திலேயே இருக்கின்றது.

இவ்வைத்தியசாலையில் கட்டிடங்களும் பழைய நிலையிலேயே இருக்கின்றன. சிறுபிள்ளை வார்ட்டுக்குத் தேவையான உபகரணங்கள் இதுவரை வழங்கப்படவில்லை. தற்போது இவ் வைத்தியசாலையில் நோயாளர் கூடியுள்ளபோதிலும் வைத்திய உபகரணங்கள், வைத்தியர்கள், தாதிகள் வழங்கப்படவுமில்லை. நியமிக்கப்படவும் இல்லை. இங்கு கடமையாற்றிய வைத்தியஅதிகாரி(M.o.)விடுதலையில் சென்று கடமைக்குச் சமூகமளிக்காத காரணத்தால் பதவி வெற்றிடமாகவே உள்ளது. தற்போது பல் வைத்திய அதிகாரி பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றுகின்றார். தற்போது மூன்று வைத்திய அதிகாரிக்குப் பதிலாக ஒரே ஒரு நிரந்தர உதவி வைத்தியர் கடமையாற்றுகின்றார். அவருடன் பதில் உதவி வைத்தியர் ஒருவரும் கடமையாற்றுகின்றார். இவ்வைத்தியசாலைக்கு தாதிகள் நியமித்துத்தருமாறு பலமுறை வேண்டுகோள் விடுத்தும் இதுவரை நியமிக்கப்படவில்லை. போதிய நிலவசதிகள் உள்ளஇவ்வைத்தியசாலையை மாவட்ட வைத்தியசாலையாகத் தரமுயர்த்திக் கட்டிடங்கள் அமைத்து வைத்தியர்களை நியமித்தால் யாழ் போதனா வைத்தியசாலைக்கு யாழ் நகரின் மேற்குப் பகுதியில் இருந்துவரும் நோயாளிகளின் நெருச்சலைக் குறைக்க முடியும். இது தொடர்பாக அரசு நடவடிக்கை எடுக்குமா?

**க. திரவியம்**
இணைச்செயலாளர்
சங்கானை அரசினர்,
வைத்தியசாலை அபி. சபை.

## மூதாட்டியின் சடலம்

வேலணை மார்ச் 22
கரம்பன் பாலக்காட்டுச் சந்தியைச் சேர்ந்த சி. சோமு - துரையம்மா என்ற எண்பது வயது மூதாட்டியின் சடலம் வேலணை கிழக்கு 4ம் வட்டாரத்தைச் சேர்ந்த பற்றைப் பகுதிக்குள் கண்டு பிடிக்கப் பட்டது. (இ-167)

# சீபாங் விசா காட் பெறுவோருக்கு வங்கி அளிக்கும் விசேட சலுகை

யாழ்பாணம் மார்ச் 22
இலங்கை வங்கியின் சீபாங் விசாகாட்டை பெறுவோருக்கு சலுகைகள் வழங்கப்படவிருக்கின்றன.

இம்மாதம் 15 ஆம் திகதியில் இருந்து ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதி வரை ஒரு மாதத்துக்கு விசாகாட் மாதமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்தக் காலத்திலேயே விசேட சலுகை வழங்கப்படவிருக்கின்றது.

இந்தக் காலப்பகுதியில் 500 ரூபா பெறுமதியான கோல் (Geld) காட் 250 ரூபாவுக்கும், 250 ரூபா பெறுமதியான சில்வர் (Silver) காட் 150 ரூபாவுக்கும் பெறலாம் என்று வடபிராந்திய முகாமையாளர் திரு. பொ. கனேசமூர்த்தி தெரிவித்தார். (க-3)

## ஐந்தாம் வகுப்பு புலமைப்பரிசில்

சுன்னாகம் மார்ச் 22
கொழும்பு கொட்டாஞ்சேனை தமிழ் அரசினர் மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் மாணவன் செல்வன் சு. சசிசேகரன் ஐந்தாம் வகுப்புப் புலமைப பரிசில் சோதனையில் முதலாவது இடத்தையும், கொழும்பு மாவட்டத்தில் ஆறாவது இடத்தையும், பெற்று சித்தி அடைந்துள்ளார்.

இவர் கொழும்பு கொட்டாஞ்சேனை சுப்பிரமணிய ஐயர் சுலோசனா தம்பதிகளின் புதல்வரும் சுன்னாகம் முகாந்திரம் முன்னாள் கல்வி அதிபதி சுதாசிவ ஐயரின் பூட்டனுமாவார். (க)

## விஷ்ணு விக்கிரகம் பிரதிஷ்டை

புதுக்குடியிருப்பு மார்ச் 22
முள்ளிவாய்க்கால் கிராமத்தில் உள்ள முல்லைச் செல்வக்குமரன் ஆலயத்தில் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஸ்ரீ விஷ்ணு விக்கிரகம் ஒன்று பிரதிஷ்டை செய்யப்பட இருக்கின்றது. மச்ச ஜயந்தி விழாவும் அங்கு கொண்டாடப்படும்.

காலஞ்சென்ற புதுக்குடியிருப்பு தம்பாபிள்ளை அவர்களால் எகிப்திய பாசையில் செய்யப்பட்ட இந்த விக்கிரகம் ஐந்து தலை நாகத்தில் ஸ்ரீ விஷ்ணுமூர்த்தி அமர்ந்திருக்கும் நிலையைக் கொண்டுள்ளது. (சு-126)

# மக்களின் மகிழ்ச்சியான வாழ்வும் மண் மீட்பும் எமது இலட்சியங்கள்

### மக்கள் முன்னணி அரசியற் பொறுப்பாளர் உரை

நெடுந்திவு மார்ச் 22
''இலங்கை அரசு எமது கோரிக்கைகளையும் உரிமைகளையும் மதித்தே பேச்சுவார்த்தைக்கு முன் வந்தது. அரசு மேற்கொள்ளும் நியாயமான நடவடிக்கைகளைப் பொறுத்தே எமது செயற்பாடுகள் அமையும். மக்களின் மகிழ்ச்சியான வாழ்வும் மண்ணின் மீட்பும் எமது பிரதான இலட்சியம் ஆகும்''

நெடுந்தீவில் இடம் பெற்ற வீரவேங்கை முஸ்தபாவின் நினைவு அஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றிய தீவுப் பகுதி விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி அரசியற் பொறுப்பாளர் திரு. வி. காஸ்ரோ இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில், ''மக்கள் எம் மண்ணுக்காக எம்முடன் தோளோடு தோள் நின்று உழைத்தார்கள். அவர்களும் இப்போது ஆயுதம் ஏந்தி எதிரிகளை அடித்து விரட்டத் தயாராக உள்ளனர். மக்கள் போராட்டம் ஒன்று மலர்வதையே நாம் விரும்புகின்றோம்'' என்று கூறினார்.

திரு. நா. சங்கரப்பிள்ளை தலைமையில் கூட்டம் நடைபெற்றது. புலவர் ஏ.டபிமுள் அரியநாயம், செல்வி க. கௌசலாதேவி ஆகியோரும் உரை நிகழ்த்தினார்கள். (க-111)

## நாணய மாற்று விகிதம்

20-3-1990

இலங்கை மத்திய வங்கிக்கும் வர்த்தக வங்கிகளுக்கும் இடையிலான உடன் மாற்றுவிகிதம்:-

| | | வாங்குதல் | விற்றல் |
|---|---|---|---|
| 100 | இந்திய ரூபா | 233 77 | 234.74 |
| 100 | அமெரிக்க டொலர் | 3997.20 | 4002 75 |
| 100 | ஸ்ரேர்லிங் பவுன்ட் | 6451 83 | 6475.16 |
| 100 | ஜேர்மன் மார்க் | 2361.38 | 2377 37 |
| 100 | பிரெஞ்சு பிராங் | 695.69 | 704.78 |
| 100 | ஜப்பானிய யென் | 26.0544 | 26.2427 |

## கண்டதும் கேட்டதும்

தற்போதைய ரயில்களில் முதலாம் வகுப்பு கிடையாது. இரண்டாம் வகுப்பும் உறங்கலிருக்கையும் மூன்றாம் வகுப்பும் தான் உண்டு. இது எல்லோருக்கும் தெரிந்த விஷயம்.

ஆனால் பழையதோர் விஷயம் பலருக்குத் தெரியாதது. 1867 ஆம் ஆண்டு ஆகஸ்ட் முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்ட கொழும்பு - கண்டி ரயிலில் நாலாம் வகுப்பு இருந்தது! உலகில் வேறெங்கும் நாலாம் வகுப்பு இருந்ததில்லை. இலங்கையில் மட்டும் தான்.

நாலாம் வகுப்பு யாருக்குத் தெரியுமா? தென் இந்தியத் தொழிலாளர்களுக்கு. இவர்கள் அப்பொழுது இன்றைய தமிழ் நாட்டிலிருந்து தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்ய வெள்ளையர்களால் இங்கு கொண்டுவரப்பட்டார்கள். நாலாம் வகுப்புப் பயணிகளான இவர்களுக்கு 'றிற்றேன்' ரிக்கெட் வசதி கிடையாது. காரணம் தெரிந்ததே. அவர்கள் திரும்பிப் போவதில்லை.

அவர்கள் உண்மையில் ரயிலில் பண்டங்களாகவே நடத்தப்பட்டார்கள். கலைஞர் என். எஸ். கிருஷ்ணன் ரயிலைப் பற்றி ஒரு பாட்டுப் பாடியுள்ளார். அது ஆசன சமத்துவத்தைக் கொண்டு வந்தது என்று அவர் பாடினார். ரயிலில் நாலாம் வகுப்பு இருந்த தகவல் ரயில் பயணத்திலும் செய்யப்பட்ட கொடுமையான பாகுபாட்டைக் காட்டுகிறது அல்லவா?

—செய்திலோலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ 14 லட்சம் மக்கள் வாழும்

# நமீபியா சுதந்திர நாடானது; போராளி நுஜோமோ ஜனாதிபதி

## 75 ஆண்டு கால அடிமைத்தளை நேற்றுடன் அறுந்தது

விண்டோக் மார்ச் 21

ஆபிரிக்கக் கண்டத்தில் கடைசிக் குடியேற்ற நாடாக இருந்த நமீபியா நேற்று நள்ளிரவு சுதந்திரம் அடைந்தது.

தென் ஆபிரிக்காவின் கட்டுப்பாட்டில் கடந்த 75 ஆண்டுகளாக இருந்த நமீபியாவின் மக்கள் தொகை சுமார் 14 லட்சமாகும்.

இதன் முதல் ஜனாதிபதியாக தென் மேற்கு ஆபிரிக்க மக்கள் முன்னணியின் தலைவரான திரு. சாம் நுஜோமோவிற்கு ஐ. நா பொதுச் செயலாளர் பெரேஸ் டி குயிலர் விசுவாசப் பிரமாணம் செய்து வைத்தார்.

உலக நாடுகளின் தலைவர்கள் சுதந்திர தின வைபவத்தில் கலந்து கொண்டனர்.

தென் ஆபிரிக்காவின் தேசியக் கொடி இறக்கப்பட்டு, நமீபியாவின் தேசியக் கொடி ஏற்றப்பட்டது.

நமீபியாவின் சுதந்திரம் தென் ஆபிரிக்காவின் எதிர்காலத்தில் திருப்பு முனையாக அமையும் என்று தென் ஆபிரிக்க வெள்ளை நிற அரசு ஜனாதிபதி எப். டி. கிளார்க் தெரிவித்தார்.

ஐ. நா. உலக சம்பவங்களில் முக்கிய பங்கு வகிக்க முடியும் என்பதை நமீபியாவின் சுதந்திரம் நிரூபித்துள்ளது என்று ஐ. நா பொதுச் செயலாளர் பெரஸ் டி குயிலர் தெரிவித்தார்.

நமீபியாவின் ஜனாதிபதி சாம் நுஜோமோ பேசுகையில், நமீபியா சுதந்திரம் பெறும் விஷயத்தில் தென் ஆபிரிக்க அரசு முற்போக்கான முறையில் நடந்து கொண்டதற்குப் பாராட்டுத் தெரிவித்தார். (எ)

### லோகசபை உப சபாநாயகராக காங்கிரஸ் எம். பி. பட்டீல்

புதுடில்லி, மார்ச் 20

இந்திய லோகசபையின் உபசபாநாயகராக இந்திரா காங்கிரஸ் எம்பி சிவராஜ் பட்டீல் ஏகமனதாகத் தெரிவு செய்யப் பட்டார்.

ஆளும் கட்சி, எதிர்க்கட்சிகளுக்கு இடையே ஏற்பட்ட கருத்து உடன்பாட்டைத் தொடர்ந்து இந்த ஏகமனதான தெரிவு இடம் பெற்றது. (எ)

### லித்துஏனியா மாநில நெருக்கடி நீடிக்கிறது!

மாஸ்கோ மார்ச் 21

சுதந்திர பிரகடனம் செய்த லித்துஏனியா மாநிலம் மீது ஆயுத அடக்கு முறை பாவிக்கப்படமாட்டாது என்று சோவியத் வெளியுறவு அமைச்சர் எட்வர்ட் ஷெவர்ட்நட்சே கூறியிருக்கின்றார்.

லித்துஏனியாவில் சோவியத் இராணுவம் குவிக்கப்படுகிறது என்ற செய்தியையும் அவர் மறுத்தார்.

இதனிடையில் –

இராணுவ ஒத்திகைகளை சோவியத் யூனியன் தனது மாநிலத்தில் நடத்தி வருவதாக லித்துஏனியா அதிபர் திரு. பேர்கிஸ் தெரிவித்தார். (எ)

### தைவானில் மாணவர் கிளர்ச்சி

தைப்பே மார்ச் 20

தைவானிலும் ஜனநாயக சீர்திருத்தம் கோரி மாணவர் கிளர்ச்சி நடத்தி வருகின்றனர்.

சுமார் 150 பல்கலைக்கழக மாணவர் தைப்பே பூங்கா வனத்தில் கடந்த ஞாயிறு ஜனநாயக ஆதரவு ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர். (எ)

# செயலிழந்த உளவு செய்மதி பூமியை நோக்கி வருகிறது!

வாஷிங்டன், மார்ச் 21

கடந்த மாதம் அட்லாண்டிஸ் விண்கலம் மூலம் விண்வெளியில் விடப்பட்ட அமெரிக்க உளவுச் செய்மதி இயந்திரக் கோளாறு காரணமாக செயலிழந்து விட்டது.

செயலிழந்த அந்த உளவுச் செய்மதி பூமியைநோக்கி பயங்கரவேகத்தில் வந்து கொண்டிருப்பதாகவும் அடுத்த 30 தினங்களில் அது சோவியத் யூனியன் மீதான வளிமண்டலத்தினுள் பிரவேசிக்கும் என்று அமெரிக்க புலனாய்வு வட்டாரங்களும் சோவியத் விண்வெளி ஆராய்ச்சிநிலையமும் தெரிவித்தன. (எ)

★ அங்குலம், அங்குலமாக முன்னேறி

# 4ஆவது தடவையும் பிரதமராவேன், திருமதி மார்கரட் தாட்சர் சபதம்!

லண்டன், மார்ச் 21

1992 இல் நடக்கவிருக்கும் பொதுத் தேர்தலில் வெற்றியீட்டி நான்காவது தடவையாகவும் பிரதமராவதற்கு நான் ஒவ்வொரு அங்குலமாக முன்னேறுவேன் – பிரிட்டிஷ் பிரதமர் மார்கரட் தாட்சர் முன்சண்டவாறு சண்டே எக்ஸ்பிரஸ் பத்திரிகைக்கு அளித்த பேட்டிஒன்றில் தெரிவித்தார்.

திருமதி தாட்சரின் ஆளும்கன்சர்வேட்டிவ் கட்சியின் செல்வாக்கு வீழ்ச்சி அடைந்துவருகிறது கட்சித்தலைமைப் பதவியில்இருந்து அவர் விலகிபுதிய தலைமைக்கு வழிவிடவேண்டும் என்று ஆளும் கட்சி எம்பிக்களில் நான்கில் ஒருபங்கினர் வற்புறுத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் அவர் சண்டே எக்ஸ்பிரஸ் பத்திரிகைக்கு அளித்தபேட்டியில் கூறியிருப்பதாவது:

'' என்னைக் கவிழ்க்க என்கட்சி எம்பிக்கள் முயற்சிக்க மாட்டார்கள். அப்படியானமுயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்களா? என்பதை என்னால் நம்பமுடியாது.

'' அரசியலில் ஏற்றமும் இறக்கமும் வரத்தான்செய்யும். ஸ்திரமானநிலையை ஏற்படுத்துவது எப்படி என்பது அதிகமானோருக்குத்தெரியும்.

'' தேர்தல்கள் கடுமையாகத் தான் இருக்கும். அதையே நானும் விரும்புகின்றேன். ஆனால் அடுத்த பொதுத்தேர்தல் நிச்சயமாக கடும் போட்டியில் தான்முடியும் '' என்றுகூறினார் திருமதி தாட்சர். (எ)

# ஐக்கிய ஜேர்மனி விஷயத்தில் வார்ஸோ அணியில் பிளவு.

ஐக்கிய ஜேர்மன் நடுநிலை நாடாக இருக்க வேண்டும் என்ற சோவியத் யூனியனின் வாதத்தை ஹங்கேரி, போலந்து, செக்கோஸ்லேவேகியா ஆகிய நாடுகள் நிராகரித்துவிட்டன.

இதனால் வார்ஸோ அணிநாடுகளிடையே ஐக்கிய ஜேர்மனிபற்றி அடிப்படைகருத்து வேற்றுமை ஏற்பட்டுள்ளது.

அமெரிக்க தலைமையிலான நேட்டோ அணியில் ஐக்கிய ஜேர்மனி இருப்பதன் மூலமே ஐரோப்பிய பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியும் என்றும் ஹங்கேரி, போலந்து செக்கோஸ்லேவேகியா ஆகியன வலியுறுத்தியுள்ளன.

மேற்கு ஜேர்மனி நேட்டோ அணியிலும் கிழக்கு ஜேர்மனி வர்ஸோ அணியிலும் தற்போது அங்கம் வகிக்கின்றன.

நேட்டோ அமைப்பின் அமெரிக்க சார்பு நாடுகளும் வார்ஸோ அணியில் ரஷ்ய நேசநாடுகளும் அங்கம் வகிக்கின்றன. (எ)


# மங்கோலியா கம். கட்சியும் ஆட்சி உரிமையை இழக்கிறது!

மங்கோலியாவிலும் ஆளும் கம்யூனிஸ்ட் கட்சி தனது ஏகபோக அரசு உரிமையைக் கைவிட்டது.

ஜனநாயகத் தேர்தல்களை நடத்துவதற்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கு முகமாக இத்தீர்மானத்தை மங்கோலியக் கம்யூனிஸ்ட் கட்சி எடுத்தது.

அரசியல் சீர்திருத்தத்தை விரும்பும் கட்சியின் பொதுச் செயலாளர் திரு. கொம்போஜாவின் ஒச்சிர்பற்றை ஜனாதிபதியாகவும் கம்யூனிஸ்ட் கட்சி அரசியல் குழு தெரிவு செய்தது. (எ)


"குழல் இனிது யாழ் இனிதென்பர்
தம்மக்கள் மழலைச் சொல் கேளாதோர்"



உங்கள் அன்புச் செல்வங்களின் வளமான
எதிர்காலத்துக்கு என்றென்றும் உற்றதுணை
ஷப்ரு

ஷப்ருவின் முதலீட்டுத் திட்டங்களில் சேர்ந்து கொள்வதன்மூலம் உங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தை உறுதிப்படுத்தி வளமாக்குங்கள்.

ஷப்ரு உங்கள் பணத்திற்குப் பாதுகாப்பு அளிப்பதுடன் கவர்ச்சிகரமான வட்டியையும் வழங்கித் திறமையான சேவையைப் புரிவதன்மூலம் உங்கள் நண்பனுகவும் திகழ்கின்றது.

ஷப்ருவின் அபரிமிதமான வளர்ச்சியும் சிறந்த முகாமைத்துவமும் உங்கள் முதலீடுகளுக்குச் சிறந்த பாதுகாப்பை அளிக்கின்றன.

எமது பிரதான நிதிச் சேவைகள்
★ சகலவிதமான வாகனங்களுக்குமான தவணைக் கொள்வனவு நிதி
★ வாகனங்களைக் குத்தகைக்கு விடல்
★ வர்த்தக மற்றும் இறக்குமதிக் கடன்கள்
★ அடைமானக் கடன்கள்
★ அபிவிருத்தி நிதியிடல்

CERTIFICATE OF DEPOSIT வைப்புச் சான்றிதழ்

| Period-Months காலம் - மாதம் | Cost of Certificate சான்றிதழின் பெறுமதி | | | | Rate வட்டி வீதம் |
|---|---|---|---|---|---|
| 06 | 4,588/- | 9,175/- | 45,872/- | 91,744/- | 18% |
| 12 | 4,133/- | 8,265/- | 41,323/- | 82,645/- | 21% |
| 24 | 3,379/- | 6,757/- | 33,784/- | 67,568/- | 24% |
| Value at Maturity முதிர்ச்சியில் பெறுமதி | 5,000/- | 10,000/- | 50,000/- | 100,000/- | ● |

நிலையான வைப்பு TERM DEPOSIT

| Period – Months காலம் – மாதம் | Monthly மாதாந்தம் | Maturity முதிர்ச்சியில் |
|---|---|---|
| 03 | – | 17% |
| 06 | 15% | 18% |
| 12 | 19% | 20% |
| 24 | 21% | 23% |
| 36 | 22% | 24% |

நிறுவனத்தின் நிதி நிலை விபரம்

| | 1986/87 | 1987/88 | 1988/89 |
|---|---|---|---|
| மூலதனமும் ஒதுக்கமும் | 11,342,354 | 14,354,927 | 23,306,911 |
| வைப்புகள் | 100,577,492 | 110,897,760 | 116,890,354 |
| வங்கிக் கடன்கள் | 7,718,284 | 6,539,639 | 11,364,064 |
| மொத்தச் சொத்துகள் | 127,175,677 | 143,822,862 | 162,239,787 |
| வைப்பாளருக்கு செலுத்திய வட்டி | 16,880,875 | 20,025,480 | 20,833,024 |
| வரி செலுத்திய பின் தேறிய இலாபம் | 2,330,012 | 3,148,350 | 2,867,657 |
| பகிரப்பட்ட இலாபம் | | 1,775,100 | 1,508,110 |

பணிப்பாளர் சபை

திரு எல். பி. ச. கருணாரட்ன,
சட்டத்தரணி, சமாதான, நீதவான், தலைவர்
திரு எஸ். பாலசுப்பிரமணியம்,
A. I. B. (Lond.), முகாமைப் பணிப்பாளர்
திரு. ஜே. டி. நவரட்ண,
A. I. B. (Lond.), பொதுமுகாமையாளர்.
திரு. ஏ. எம். எச். பாரி, B.A. (Hons.)
திருமதி. ஆர். பாலசுப்பிரமணியம்
இலங்கை மத்திய வங்கியின் அனுமதி பெற்ற நிதி நிறுவனம்

SHABRA
ஷப்ரு யுனிக்கோ பினன்ஸ் லிமிட்.
61, பௌத்தலோக மாவத்தை, கொழும்பு - 4.
தொலைபேசி - 589310/500576

D. HEYZER


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலைக்கழகங்களுக்கு பதிலாக

# பிராந்திய கல்லூரிகள் திறக்கப்படும்

யாழ்ப்பாணம், மார்ச் 22

பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்றும், பல்கலைக்கழக அனுமதி கிடைக்காத மாணவர்களுக்கு உயர் கல்வி அளிக்கும் வகையில் பல்கலைக்கழகத்துடன் இணைந்த பிராந்திய கல்லூரிகள் (Regional College) உருவாக்கப் படவிருக்கின்றன.

வருடா வருடம் நடைபெறும் ஜி. சீ. ஈ. (உயர்தர) பரீட்சையில் சுமார் 35 ஆயிரம் மாணவர்கள் வரை பல்கலைக்கழக அனுமதி பெறத் தகுதிபெறுகிறார்கள்.

ஆனால் இலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்களில் வருடாவருடம் 6 ஆயிரம் மாணவர்களே அனுமதிக்கப் படுகிறார்கள்.

மிகுதியான மாணவர்களின் நிலை பற்றி ஆராய்ந்த இளைஞர் விவகாரங்களுக்கான ஆணைக்குழு விசேட சிபார்சு ஒன்றை வழங்கியிருக்கிறது. அதன் பிரகாரமே பிராந்திய கல்லூரிகள் உருவாக்கப்படவிருக்கின்றன.

பிராந்திய கல்லூரிகளில் சேரும் மாணவர்களுக்கு இரு வருடத்தில் தம் கல்வியை முடித்து, வேலைக்குச் செல்ல வாய்ப்புக் கிடைக்கும். அதே நேரம் மேல்படிப்பையும் வேண்டுமானால் பல்கலைக் கழகத்தில் அவர்கள் தொடரலாம்.

இந்தக் கல்லூரிகளில் அவை அமைந்துள்ள பிராந்தியத்தின் அபிவிருத்தியுடன் சம்பந்தப்பட்ட துறைகளுக்கே முக்கிய இடம் அளிக்கப்படும்.

தற்சமயம் பல்கலைக்கழகங்களில் உள்ள கற்கை துறைகளும் இந்தக் கல்லூரிகளுக்கு பகிர்ந்தளிக்கப்படும்.

பல்கலைக்கழக மாணவரின் பட்டப் படிப்புக்காலமும் இந்தக் கல்லூரிகள் மூலம் அரைவாசியாகக் குறைக்கப்படும் வாய்ப்பும் ஏற்படுகிறது.

அதனால் பல்கலைக்கழகங்களுக்கு கூடுதல் மாணவர்கள் சேர்க்கப்படும் வாய்ப்பும் ஏற்படுகிறது.

இந்த விடயம் குறித்து பல்கலைக்கழக மானிய ஆணைக் குழு விரிவாக ஆராய்ந்து வருகிறது. (உ-3)

## கற்றலுக்கு ஏற்ற வலுவை உடற்பயிற்சி தருகிறது

சாவகச்சேரி மார்ச்22

பாடசாலைகளில் பெறும் உடற்பயிற்சிகள் கற்றலுக்கு ஏற்ற உடல்வலுவையும்அளிக்கின்றன. அழகு, உற்சாகம் ஆகியவற்றைத் தருவதுடன் நற்பண்புகள் வளரவும் விளையாட்டுக்கள் உதவுகின்றன.

யாழ் கோட்டக்கல்வி அலுவலகக்கல்வி அதிகாரி திரு. எஸ். வி. மகேஸ்வரவேல் சந்திர புரஸ்கந்தவரோதய கனிஷ்ட வித்தியாலய வருடாந்தஇல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதமவிருந்தினராகக்கலந்து கொண்டு உரையாற்றுகையில் இப்படிக் கூறினார்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தென்மராட்சி மாணவர் அமைப்பின் பொறுப்பாளர் திரு. என். ரஞ்சன் சிறப்பு விருந்தினராகக்கலந்துகொண்டார்.

போட்டிகளில் 254 புள்ளிகள் பெற்ற நீலஇல்லம் சாம்பியனானது. 243, 186, 165, புள்ளிகளைப் பெற்ற சிவப்பு, மஞ்சள், பச்சை, இல்லங்கள் முறையே2, 3, 4, ஆம்இடங்களைப் பெற்றன

பிரதமவிருந்தினர் கேடயங்களையும் வெள்ளிக்கிண்ணங்களையும்வீரர்களுக்கும்வீராங்கனைகளுக்கும் வழங்கிக் கௌரவித்தார். (இ-31)

## நினைவாலயம்

யாழ்ப்பாணம், மார்ச் 22

வன்னிமாவட்டத்தில் வீரமரணம் அடைந்த லெப்டினன்ட் துர்க்காவின் பெயரில் நினைவாலயம் ஒன்றை அமைக்க புதுக்குடியிருப்பு மக்கள் துரித நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

அவரின் நினைவுத் தினமான இம்மாதம் 22ம் திகதி இந்நினைவாலயம் புதுக்குடியிருப்பு பொதுநூலாக முன்றலில் அமைக்கப்பட்டுத் திறந்து வைக்கப்படும் என அறிய வருகின்றது. (சு-126)

# குருவருள் இன்றி திருவருள் கைகூடாது

## வட்டு. இந்து விக்ரகப் பிரதிஷ்டை விழாவில் உரை

வட்டுக்கோட்டை, மார்ச் 22

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் 8 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 8.30 மணிக்கு நடராசர் சிவகாமி அம்மாள் சகிதம் சிவா விக்கிரகம் சிவாச்சாரியார் தலைமையில் பிரதிஷ்டை செய்து வைக்கப்பட்டது.

விழாவுக்கு வட்டுக்கோட்டைக் கொத்தணி அதிபர் திரு. சி. தாஸ் தலைமை வகித்தார்.

சிவாச்சாரியார் பிரதிஷ்டை செய்து வைத்துப் பேசும் போது வருங்காலத்து நாட்டை வளம்படுத்தும் சிறார்களுக்குக் குருவருள் இல்லாமல் திருவருள் கைகூடாது. ஆகவே சிறந்த மாணவனுக்குக் குருவிடம் விசுவாசம் இருக்க வேண்டும்.

சிறந்த மாணவன் குருவிடம் நுழைந்து நுழைந்து கேட்டு சிறந்த அறிவைப் பெறவேண்டும். என்று கூறினார்.

கொத்தணி அதிபர் திரு. சி. தாஸ் தமது தலைமையுரையில் இந்த எண்ணம் சில காலத்துக்கு முன்பு எழுந்தது. இவ்வெண்ணத்திற்கு அடிகோலியவர் ஓய்வுபெற்ற கொத்தணி அதிபர் திரு. நா. வேலுப்பிள்ளை ஆகும். இதற்கு முன்னோடியாக ரூபா 1000/- கொடுத்து உதவினார் என்று கூறினார்.

பண்டத்தரிப்புக் கோட்டக் கல்வி அதிகாரி திரு இ. சிவானந்தன் சிற்பக்கலாநிதி சித்திர வட்டாரக்கல்வி அதிகாரி திரு. ஆ. தம்பித்துரைக்குப் பொன்னாடை போர்த்தார்.

கோட்டக்கல்வி அதிகாரி திரு. இ சிவானந்தன் பேசும் போது குனித்த புருவமும் என்னும் பாடலின் தோற்றமே இந்நடராசர் சிவா விக்கிரகமாகும். சைவசமயிகளுக்கு முழுமுதற் கடவுள் சிவன். சிவனின் தாண்டவக் கோலமே நடராசர் வடிவம். ஐந்தாவது வேதமாகிய நாட்டிய வேதத்திலுள்ளது தாண்டவம் இது ஆண்களுக்குரியது இதிலே தான் இத்திருவுருவம் அமைந்துள்ளது. இதைப் படைத்த சிற்பி கலையார்வம் மிக்கவர். சிறந்த சிற்பாசிரியர் கலையறிவு மிக்கவர் என்று கூறினார்.

கலாகேசரி, சித்திர கல்வி அதிகாரி, சிற்பக்கலாநிதி திரு ஆ. தம்பித்துரை பேசியபோது இந்த விக்கிரகம் 12 ஆம் நூற்றாண்டு சோழர்காலத்தில் அமைந்த சிற்ப சாத்திர முறைப்படி ஆக்கப்பட்டது.

ஓய்வுபெற்ற வட்டுக்கோட்டைக் கொத்தணி அதிபர் திரு நா. வேலுப்பிள்ளை பேசும்போது நடராசர் சிலையொன்று இக்கல்லூரியில் அமைக்க வேண்டுமென்ற கனவு இன்று கைகூடுவதைக் காண பெருமகிழ்ச்சி ஏற்படுகிறது என்று கூறினார்.

உபஅதிபர் பிரம்மஸ்ரீ ப. சர்வேஸ்வரஐயர் உரையாற்றும்போது வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி வரலாற்றில் இந்நிகழ்ச்சி பொன்எழுத்துக்களால் பொறிக்க வேண்டிய ஒன்றாகும். ஆதிநிலையில் சிவா விக்கிரகம் முக்கிய இடம்பெற்றமை உணரத்தக்கது. கலைஞனுக்கும் மக்களுக்கும் நெருங்கிய தொடர்பு இந்த விக்கிரக மூலம் ஏற்படுகிறது என்று கூறினார்.

பொறுப்பாசிரியர் திரு. சி. சிவகணேசசுந்தரம் முடிவுரையை நிகழ்த்தினார். இந்து மாமன்றத்தலைவர் செல்வன் ப. இளங்கோ நன்றியுரை நிகழ்த்தினார். (க-161)

### தலவாக்கொல்லையில்

# கலாபவனம் ஒன்றை அமைக்க அமைச்சர் தொண்டா முயற்சி

நுவரெலியா, மார்ச் 22

தலவாக்கொல்லை ஸ்ரீ கதிரேசன் கோவில் வளவில் கலாபவனம் ஒன்றை அமைக்க அமைச்சர் தொண்டமான் நடவடிக்கை எடுத்துள்ளார்.

சுமார் 30 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ள இக்கலாபவனம் தமிழர்களின் கலை, கலாச்சாரத்தை பிரதிபலிப்பதாகவும், அவற்றை வளர்த்தெடுக்கும் மையமாகவும் விளங்கும் குறிப்பாக மலையகத்தின் இந்துசமய, கலாச்சாரத்துறையை வளர்த்தெடுப்பதற்கான கேந்திரஸ்தானமாக செயற்படும். இ. தொ. க. அரசியல் பிரிவு அமைப்பாளரும், மத்திய, மாகாணசபை உறுப்பினருமான திரு. சந்தசாமி இவ்வாறு குறிப்பிட்டார்.

ஆலயத்திற்குப் பக்கத்தில் தமிழ்ப் பிள்ளைகளின் நலன் கருதி பாலர் பாடசாலை ஒன்று அமைக்க மத்திய மாகாணசபையால் தனக்கு வழங்கப்பட்ட நிதியிலிருந்து ஒரு இலட்சத்து 30 ஆயிரம் ரூபாவை ஒதுக்கியுள்ளதாகவும், இதற்கான வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்பட இருப்பதாகவும் திரு. சந்தசாமி மேலும் குறிப்பிட்டார். (க-58)

# பாடசாலைக்கும் சுற்றாடலுக்கும் நெருங்கிய உறவு வேண்டும்

## மானி. மகளிர்கல்லூரி விழாவில்உரை

மானிப்பாய் மார்ச் 22

ஒரு பாடசாலையின் கல்வித்தொழிற்பாடுகள் பாடசாலை அமைந்துள்ள சமுதாயத்தின் தேவைகளையும் அபிலாசைகளையும் நிறைவேற்றக் கூடியதாக அமைய வேண்டும். பாடசாலைக்கும் சுற்றாடலுக்குமிடையே நெருங்கிய தொடர்பும் ஒற்றுமையும் வேண்டும். அப்போது தான் அந்த சூழலில் வாழும் மக்கள் பாடசாலையின் சகல தேவைகளையும் நிவர்த்தி செய்வதற்கு தோளோடு தோள் நின்று உழைப்பார்கள் மானிப்பாய்மகளிர் கல்லூரி மலர்வெளியீட்டுவிழவில் உரையாற்றிய கல்லூரிஅதிபர் திருமதி ச. கல்யாணசுந்தரேசன் இவ்வாறு கூறினார்.

மானிப்பாய் மகளிர் கல்லூரியில் துணைமலர் வெளியீட்டு விழாவும், கல்லூரி தினம் பரிசளிப்பு விழாவும், நடைபெற்றன துணைமலர் வெளியீட்டு விழாவுக்கு வையன் எஸ். பத்மநாதன் பிராந்திய பொறியியலாளர் உள்ளூராட்சித் திணைக்களம் மாவட்டபிரதிஆளுனர் அவர்களும் திருமதி பி. பத்மநாதனும் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர். கல்லூரி தினம் பரிசளிப்பு விழாவிற்கு திரு. ஆர். கே. குலசேகரம் உதவிக் கல்விப் பணிப்பாளர் மருதனாமடம் கோட்டம் அவர்களும் திருமதி டி. குலசேகரம் அவர்களும் பிரதம விருந்திலர்களாகக் கலந்து கொண்டனர்.

இரு விழாக்களிற்கும் கல்லூரி அதிபர் திருமதி எஸ். கல்யாணசுந்தரேசன் அவர்கள் தலைமை தாங்கினார்.

திரு. சிவ இராஜேந்திரன் ஜே. பி. சட்டத்தரணி பாடசாலை நிறுவனர்கள் பற்றி உரையாற்றினார். திரு ஆர். ஆர். ஸ்ரீதரன் நன்றியுரை கூறினார். (ச-90)

### ஜனாதிபதிக்கு கோரிக்கை

# உடல் ஊனமுற்றோருக்கு தனியான கட்டடம் வேண்டும்.

யாழ்ப்பாணம் மார்ச் 22

வடக்கேயுள்ள நூற்றுக்கணக்கான உடல் ஊனமுற்றோரின் புனர்வாழ்வுக்கென அரச காணியொன்றில், தனியான கட்டடமொன்றை அமைத்துத்தருமாறு ஜனாதிபதியைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானம் ஒன்று உடல் ஊனமுற்றோர் நலன்புரிச் சங்கத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இக் கூட்டம் சங்கத்தலைவர் திரு. அ. குணசிங்கம் தலைமையில், கடந்த ஞாயிறு மாலை யாழ்ப்பாணம், கே. கே. எஸ். வீதியில் உள்ள கில்னர் மண்டபத்தில் நடைபெற்றது.

நிறைவேற்றப்பட்ட ஏனைய தீர்மானங்களின் விபரம் வருமாறு:-

★உடல் ஊனமுற்றோர் சுயதொழில் வாய்ப்பைப் பெறும் வகையில் வகுப்புகளையும், சாதனங்களையும் மேற்படி உத்தேச கட்டடத்தில்அமைத்துத் தரவேண்டும்.

★ அவர்கள் தங்கள் பொழுதை பயனுள்ள வகையில் கழிக்கும் பொருட்டு நூலக, விளையாட்டு வசதிகளையும் ஏற்படுத்தித் தர வேண்டும். (க-ச)

## உதவி வழங்குகிறது

நெடுந்தீவு, மார்ச் 22

யாழ். செஞ்சிலுவைச் சங்கம் நெடுந்தீவுப்பகுதிக்கு பல வழிகளிலும் உதவி வருகிறது. (ச-111)

## செஞ்சிலுவைச் சங்க கொடித்தினம்

யாழ்ப்பாணம் மார்ச் 22

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ் பிரிவு நிவாரண புனர்வாழ்வு வேலைகளுக்காக கொடித்தினம் ஒன்றை நடாத்தவுள்ளது.

பாடசாலைகளுக்கு 22 ஆம் 23 ஆம் திகதிகளிலும், பொதுமக்களுக்கு 27 ஆம் திகதிகளிலும் கொடி விற்பனை செய்யப்படும். (க-ச)

## பயிற்சி ஆசிரியர் மாதச் சம்பளம்

அச்சுவேலி மார்ச் 22

ஆசிரியர் கலாசாலையில் பயிற்சிபெறும் ஆசிரியர்களின் மாதாந்த சம்பளம் மீண்டும் ஆசிரியர் கலாசாலைகளில் வைத்து வழங்கப்படும்.

இதற்கான அனுமதியை ஆசிரியர் கலாசாலை மேலிடம் வழங்கியுள்ளது.

பாடசாலைகளில் பெப்ரவரிச் சம்பளம் பெற்றுக் கொள்ளாத ஆசிரியர்களுக்கான சம்பளப்பாக்கி உட்பட மாதாந்தச் சம்பளம் ஆசிரியர் கலாசாலைகளில் வைத்து இந்த மாதம் தொடக்கம் வழங்கப்படும் என பலாலி ஆசிரியர் கலாசாலையின் கணக்குப் பிரிவில் கடமையாற்றும் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (க-11)

## கூட்டுறவுசங்க நடவடிக்கை

வட்டுக்கோட்டை மார்ச்22

சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் பாவனையாளர்களின் நன்மை கருதிப் பதினொரு கிளைகளில் பல்பொருள் விற்பனை நிலையமாக இயங்கச் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளது.

இக்கிளைகளில் பைக்கெற்றுக்களில் அடைக்கப்பட்ட சாமான்கள், அலுமினியச் சாமான்கள், பிளாஸ்ரிக் சாமான்கள், பெட்டி, கடகம், பாய் முதலியன விற்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (க-161)

# கேள்வி அறிவித்தல்

**பிரதேசக் கல்வித் திணைக்களம் நல்லூர், யாழ்ப்பாணம்,**

**வடக்கு கிழக்கு மாகாண அரசின் நிதி உதவியின் கீழ் யாழ் மாவட்ட பாடசாலைகளில் மலசலகூடம், கட்டட வேலைகள்**

கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் யாழ் பிரதேசக் கல்வித் திணைக்களத்தின் கேள்விச் சபைத் தலைவரால் 1990ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 02ம் திகதி (02-04-90)மு.ப. 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். ஒவ்வொரு வேலைக்கும் எதிரேயுள்ள தொகைக்கு அல்லது அதனிலும் கூடிய தொகைக்கு கட்டிட வேலை செய்வதற்கென கல்வித்திணைக்களம், கட்டு வேலைத் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், கட்டிடத் திணைக்களம் ஆகிய ஏதாவதொரு திணைக்களத்தில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரருக்கு 1990ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28ஆம் திகதி (28-03-1990) பிற்பகல் 2.00 மணி வரை மீளளிக்கப்படாத கேள்விப் பணமாக (ரூபா 50/-) ரூபா ஐம்பதும், மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணமாக ரூபா இருநூற்றி ஐம்பதும் (ரூபா 250/-) செலுத்தியதன் பேரில் கேள்விப் பத்திரங்கள் யாழ் கல்வித் திணைக்களத்தில் வழங்கப்படும். மீளளிக்கப்படாத கேள்விப் பணம் ரூபா ஐம்பதும் பணமாக கல்வித் திணைக்களத்தில் செலுத்தப்படல் வேண்டும். கேள்விகள் 1990ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 02ஆம் திகதி (02-04-90) முற்பகல் 10.00 மணிக்கு யாழ் கல்வித் திணைக்களத்தில் திறக்கப்படும். அச்சமயம் கேள்விக்காரர் சமூகமளிக்கலாம்.

தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் அதுபற்றி அறிவிக்கப்பட்ட திகதியிலிருந்து 10 நாட்களுக்குள் ஒப்பந்தம் கைச்சாத்திடல் வேண்டும். தவறின் மறு அறிவித்தலின்றி தெரிவு இரத்துச் செய்யப்படும்.

கேள்விப் பத்திரங்களுடன் இணைத்து வழங்கப்படும் ஒவ்வொரு வேலைக்குமான கால அட்டவணைப்படியும், ஒப்பந்தப் பிரமாணங்களின் படியும் தவறாது வேலையைப் பூர்த்தி செய்து தரக்கூடியவர்கள் மட்டும் இவ்வேலைக்கு விண்ணப்பிக்கலாம்.

மேலதிக விபரங்களை யாழ் பிரதேசக் கல்வித் திணைக்களத்தில் கட்டிட வேலைப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**செல்வி தி. பெரியதம்பி**
பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

பிரதேசக் கல்வித் திணைக்களம்,
யாழ்ப்பாணம், 20-03-1990.

| | பாடசாலையின் பெயர் | வேலை விபரம் | பதிவு செய்திருக்க வேண்டிய தொகை |
|---|---|---|---|
| 01. | யா/மெலிஞ்சி முனை றோ. க. த. க பாடசாலை | மல, சல கூடம் அமைத்தல் | 100,000 00 |
| 02. | யா/காட்டுப்புலம் அ. த. க பாடசாலை | மல, கூடம் அமைத்தல் | 100,000.00 |
| 03. | யா/நாவாந்துறை றோ. க. த. க பாடசாலை | சல கூடம் அமைத்தல் | 100,000.00 |
| 04. | யா/வேம்படி மகளிர் கல்லூரி | சல கூடம் அமைத்தல் | 100,000.00 |
| 05. | யா/சுதுமலை சின்மய பாரதி வித்தியாலயம் | மல, சல கூடம் அமைத்தல் | 100,000.00 |
| 06. | இணுவில் சைவ மகாஜன வித்தியாலயம் | சல கூடம் அமைத்தல் | 100,000.00 |
| 07. | யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி | சல கூடம் அமைத்தல் | 100,000.00 |
| 08. | யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி | மல சல கூடம் அமைத்தல் | 100,000.00 |
| 09. | யா/பண்டத்தரிப்பு ஜசிந்தா அ. த. க. பாடசாலை | சல கூடம் அமைத்தல் | 100,000.00 |
| 10. | யா/பொம்மைவெளி அ.மு.க.பா. | சுற்றுமதில் | 200,000.00 |
| 11. | யா/மெடிஸ்த பெண்கள் கல்லூரி | சுற்றுமதில் | 300,000.00 |
| 12. | யா/தொண்டைமனாறு வீரகத்தி ம. வி. | இரு 100'x20' கட்டடமும் 80'x20' கட்டடமும் மிகுதி வேலைகள் | 800,000.00 |

[சி-4069]

# நெடுந்தீவு- வேலணையில் பதவியேற்ற கிராமசேவையாளர்

யாழ்ப்பாணம், மார்ச் 22

யாழ். மாவட்டத்தில் புதிய கிராமசேவையாளர் பிரிவுகளில் கிராமசேவையாளர் பதவிகளை ஏற்றுள்ளனர்.

யாழ்ப்பாணம், நல்லூர், தெல்லிப்பழை, சண்டிலிப்பாய், சங்கானை ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்த கிராம சேவையாளரின் விவரம் ஏற்கனவே உதயனில் வெளிவந்தது.

இன்றைய உதயனில் நெடுந்தீவு, வேலணை, ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் பதவி ஏற்றவர்களின் விவரம் வெளிவருகிறது.

**நெடுந்தீவு உ. அ.அ.பிரிவு**

நெடுந்தீவு மேற்கு(J.1)- கே. கோபாலபிள்ளை, நெடுந்தீவு தெற்கு(J.2)- என் நடராஜா, நெடுந்தீவு மத்தி மேற்கு(J.3)- பீ. கதிரேசன், நெடுந்தீவு மத்தி(J.4)- என். கந்தையா, நெடுந்தீவு மத்தி கிழக்கு (J.5)- ரீ பசுபதி, நெடுந்தீவு கிழக்கு (J.6)- ஜே. ஜெ. தனராஜா,

**வேலணை உ.அ.அ.பிரிவு**

மண்டைதீவுகிழக்கு (J.7)- என். சுந்தரராஜா, மண்டைதீவுமேற்கு(J.8)-இன்னும் நியமிக்கப்படவில்லை, மண்டைதீவு தெற்கு (J.9)-எஸ். ஜயசிங்கம், அல்லைப்பிட்டி (J.10)- எஸ். சுந்தரலிங்கம், மண்கும்பான் (J.11) - கே. கணேசவேல், வேலணை வடக்கு (J.12) - சி. சிவகுலதிலகசிங்கம், வேலணை வடகிழக்கு (J.13) - இன்னும் நியமிக்கப்படவில்லை.

வேலணை கிழக்கு (J.14)- கே. கணேசலிங்கம், வேலணை தென்கிழக்கு (J.15) - இன்னும் நியமிக்கப்படவில்லை, வேலணைகிழக்கு மத்தி(J.16) இன்னும் நியமிக்கப்படவில்லை, வேலணை தெற்கு (J.17)- கே. மகாலிங்கம், வேலணைமேற்கு மத்தி(J.18) எஸ். புவனேஸ்வரன், வேலணை மேற்கு (J 19) - எஸ். இராமலிங்கம், சரவணை கிழக்கு (J.20)- கே. இராமேஸ்வரன், சரவணை மேற்கு (J.21) - சி. சச்சிதானந்தன்,

புங்குடுதீவு வடகிழக்கு (J.22)-வி. குருமூர்த்தி, புங்குடுதீவு கிழக்கு (J 23) இன்னும் நியமிக்கப்படவில்லை, புங்குடுதீவு தென்கிழக்கு (J.24)- கே. பரமேஸ்வரன், புங்குடுதீவு கிழக்கு வடக்கு (J 25)- இன்னும் நியமிக்கப்படவில்லை, புங்குடுதீவு தெற்கு (J.26)-கே. சந்திரன், புங்குடுதீவு வடக்கு(J.27) இரத்தினகுமாரன், புங்குடுதீவு மத்தி வடக்கு (J.28)- இன்னும் நியமிக்கப்படவில்லை,புங்குடுதீவு தெற்கு மேற்கு (J.29) - ஆர். வைத்தியலிங்கம்,

புங்குடுதீவு மத்தி தெற்கு (J.30) - இன்னும் நியமிக்கப்படவில்லை, புங்குடுதீவு மத்தி கிழக்கு (J.31) - ஏ. துரைராஜா, புங்குடுதீவு வடக்கு மேற்கு (J.32) - எஸ். சச்சிதானந்தன், புங்குடுதீவு மேற்கு (J:33) - எஸ். குணரத்தினம், நயினாதீவு வடக்கு (J.34)-எம். அம்பிகைபாகன், நயினாதீவு மத்தி (J.35)- என். கந்தசாமி, நயினாதீவு தெற்கு (J.36)ரீ. பாலசிங்கம். (இ-ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாளாந்த கூலி ஒப்பந்த தொழிலாளருக்கான
# விண்ணப்பம்

பூநகரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் நாளாந்த கூலி அடிப்படையிலோ ஒப்பந்த அடிப்படையிலோ வேலை செய்ய தொழிலாளர்களுக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது. விண்ணப்பங்களை நேரிலோ, கடித மூலமோ பொது முகாமையாளர், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், பூநகரி என்ற முகவரிக்கு 31-03-90க்கு முன் சமர்ப்பிக்கவும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

இங்ஙனம்
**பொது முகாமையாளர்**

பல நோக்குக் கூ. சங்கம்,
பூநகரி. [சி-4074]

## அந்தியேட்டிக்கிரியை அழைப்பும் நன்றி நவிலலும்



## அமரர் காசிநாதர் ஆறுமுகம் சபாரத்தினம்

அன்பான புன்சிரிப்பாலும், பண்பானபேச்சாலும் பணிவான நடத்தையாலும், ஊரார்க்கும், உற்றவர்க்கும் ஓர் உத்தமனாக வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்தால் அழைக்கப்பட்ட எங்கள் அன்புத் தந்தையின் மரணச் சடங்கின் போது எங்கள் துன்பத்தில் பங்கு கொண்டும், சகல வழிகளிலும் உதவிகள் செய்தும், அனுதாபங்கள் தெரிவித்தும் எங்களுக்கு ஆறுதல் வழங்கிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றியை தெரிவிப்பதோடு இன்று (22 - 03 - 1990) நடைபெறும் அந்தியேட்டி, வீட்டுக்கிரியைகள், பந்திபோசனம் ஆகியவற்றில் பங்கு கொள்ளுமாறு அனைவரையும்அன்புடன் அழைக்கின்றோம்.

எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்ம சாந்திக்காக எல்லாம்வல்ல ஈழத்துச் சிதம்பரத்து சிவகாமி சமேத நடராஜப் பெருமானையும், ஆண்டிக்கேணி ஐயனாரையும் வணங்கிப் பிரார்த்திக்கிறோம்.

**மனைவி, மக்கள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

நீலிப்பந்தனை,
காரைநகர். (2931)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்:
25 - 03 - 1906

மறைவு:
20 - 02 - 1990

## திருமதி கந்தையா பொன்னம்மா

அன்பின் உறைவிடமாய், பாசத்தின் சிகரமாய் வாழ்ந்த எல்லோரையும் வாழவைத்த எங்கள் அன்புக்குரிய குடும்பத் தலைவியின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

எமது குடும்பத் தலைவியின் இறுதிக் கிரியையில் கலந்து கொண்டோருக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும், மலர் வளையங்கள் சார்த்தியோருக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவி புரிந்த அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத்தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

கந்தையா திருநாவுக்கரசு,
இரத்தினேஸ்வரி நவநாதன்,
சரஸ்வதி இரத்தினசிங்கம்,
இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்,
சகோதரர்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

''இரத்தினகிரி''
கோண்டாவில். (12041)

# ராஜன் கதிர்காமர் கேடயம் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கு

யாழ்ப்பாணம், மார்ச் 22
யாழ்ப்பாணக் கல்லூரிக்கும், சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும் இடையில் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற 50 ஓவர் கிரிக்கட் போட்டியில் சென் பற்றிக்ஸ் வெற்றியீட்டி ராஜன் கதிர்காமர் வெற்றிக் கேடயத்தைச் சுவீகரித்தது.

சென்பற்றிக்ஸ் சகல விக்கட்டுக்களையும் இழந்து 105 ஓட்டங்களையும், யாழ்ப்பாணக் கல்லூரி சகல விக்கட்டுக்களையும் இழந்து 80 ஓட்டங்களையும் பெற்றன.

சென் பற்றிக்ஸ் 25 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

கடந்த நான்கு வருடங்களாக யாழ்ப்பாணக் கல்லூரியே கேடயத்தை கைப்பற்றியிருந்தது. முதல்தடவையாக சென்பற்றிக்ஸ் இம்முறை கேடயத்தைப் பெற்றது.

'ஷப்றா' வழங்கிய வெற்றிக் கிண்ணங்கள் சிறந்த துடுப்பாட்டக்காரராக தெரிவு செய்யப்பட்ட பாஸ்கரனுக்கும் (சென் பற்றிக்ஸ்), சிறந்த பந்து வீச்சாளராக தெரிவு செய்யப்பட்ட ரீ. பாரத் (யாழ்ப்பாணக் கல்லூரி) க்கும், சகலதுறை சிறந்த வீரராக தெரிவு செய்யப்பட்ட எம். என். ஜி. அன்ரனிப்பிள்ளை (சென் பற்றிக்ஸ்)க்கும்வழங்கப்பட்டன. (இ-3)

## முதலிடம் பெற்ற மாணவி!

யாழ்ப்பாணம், மார்ச் 22
கொடிகாமம் கொத்தணி மட்டப் பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் மந்துவில் றோமன் கத்தோலிக்க பாடசாலை மாணவி ஒருவர் சிறந்த வீராங்கனைக்கான விருதைப் பெற்றுக்கொண்டார்.

11 வயதுக்கு உட்பட்ட பெண்கள் பிரிவில் முதல் இடத்தைப்பெற்ற இவரின் பெயர் செல்வி சு. பிலோமினா.

கொடிகாமம், திருநாவுக்கரசு மகா வித்தியாலய மைதானத்தில் போட்டிகள் நடைபெற்றன.

ஆறு மகா வித்தியாலயங்களும் மூன்று வித்தியாசாலைகளும் பங்கெடுத்த மேற்படி போட்டிகளில் செல்வி சி. பிலோமினா கலந்துகொண்ட மந்துவில் றோமன் கத்தோலிக்க கனிஷ்ட பாடசாலை ஐந்தாவது இடத்தைப் பெற்றுக்கொண்டது குறிப்பிடத்தக்கது. (ஓ-51)

## விளை போட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 22
துன்னாலை மேற்கு மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டி பாடசாலை அதிபர் திரு இ. கந்தசாமி தலைமையில் நடைபெற்றது.

கொத்தணி அதிபர் திரு. ஏகாம்பரம் பிரதம விருந்தினராகவும் இளைப்பாறிய அதிபர் திரு. க. தர்மராஜா பிரதம மத்தியஸ்தராகவும் கலந்து கொண்டார்கள். (க)

## எறிபந்து வலைப்பந்து போட்டிகள்

அரியாலை 71 ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவை ஒட்டி யாழ் மாவட்டரீதியில் 7 பேர் கொண்ட 12 ஓவர் எறிபந்தாட்டப் போட்டியும் பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டியும் அரியாலை சனசமூக நிலையமைதானத்தில் நடைபெறும். கலந்து கொள்ள விரும்புவோர் யாழ்ப்பாணம் புங்கங்குளம் 57/1 இல்லத்தில் விளையாட்டுச் செயலாளர் திரு செ. க. சண்முகலிங்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (க

## நவீல்ட் மெய்வல்லுனர் போட்டி

கைதடி நவீல்ட் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அதிபர் திரு. யே. எஸ். டேவிட் தலைமையில் நடைபெற்றது.

வைத்திய கலாநிதி திருமதி ஜோய் கனகராசா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

மெய்வல்லுனர் போட்டிகளில் சிவப்பு இல்லம் முதலாம் இடத்தையும் பச்சை, மஞ்சள் இல்லங்கள் முறையே 2ம் 3ம் இடங்களையும் பெற்றன. ( : ;

# மத்திய கல்லூரியுடனான போட்டியில் யாழ்இந்து வெற்றி

யாழ்ப்பாணம், மார்ச் 22
யாழ்ப்பாணம் மத்தியக்கல் கல்லூரியுடனான கிரிக்கெட் போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி ஆறு விக்கட்டுகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

முதலில்துடுப்பெடுத்தாடிய மத்தியக்கல்லூரி அணி 169 ஓட்டங்களைப் பெற்றது. அணித்தலைவர்முகுந்தன் 49, ஜெயசீலன் 30, நிரஞ்சன் 25, ரமேஸ் 21 ஓட்டங்களைப் பெற்றனர் வரதன் 5 விக்கட்டுக்களையும் பிரபாகரன் 3 விக்கட்டுக்களையும் கைப்பற்றினர்.

யாழ் இந்து அணி தனது முதல் இனிங்சில்241 ஓட்டங்களைப் பெற்றது அணித்தலைவர் ஜெயராஜ் 72, கோபிராஜ் 52, கபிலன் 39, ஆர். வரதன் 39, வரதன் 10 ஓட்டங்களைப் பெற்றனர். பிரபாகரன் 4விக்கெட்டுகளையும் அருணோதயன் 2 விக்கட்டுகளையும் கைப்பற்றினர்.

மத்தியகல்லூரிஅணி தனது இரண்டாவது இனிங்சில் 132 ஓட்டங்களைப் பெற்றது. நிரஞ்சன் 44, சாஜித் 19, ஜீத் 18 ஓட்டங்களைப் பெற்றனர். வரதன் சிறப்பாகப் பந்துவீசி 6 விக்கட்டுகளை 1)யும், பிரபாகரன் 2விக்கட்டுகளையும் கைப்பற்றினர்.

வெற்றிபெற 61 ஓட்டங்களைப் பெறவேண்டிய நிலையில் தனது இரண்டாவது இனிங்சை தொடங்கிய இந்துக்கல்லூரி 4 விக்கட் இழப்பிற்கு 65ஓட்டங்களைப் பெற்றது. கோபிறாஜ் ஆட்டமிளக்காமல் 25, ஜெயராஜ் 14, கபிலன் 10 ஓட்டங்களைப் பெற்றனர். அருணோதயன் 2 விக்கட்டுகளை கைப்பற்றினார்.

இறுதிக் கட்டத்தில் மிகவும் விறுவிறுப்பாக அமைந்த இப் போட்டியை பார்க்க பெருந்திரளான ரசிகர்கள் வந்திருந்தனர் போட்டியின் விறுவிறுப்பினால் இருகல்லூரிகளினதும் ஆதரவாளர்கள் தம்நிலை மறந்து ஆட்டத்தில் பலமுறை குறுக்கிடும் செய்தனர். (க-மு)

## மானி-கொக் இந்துகளின்போட்டியில்
# பாஸ்கரனின் சிறந்த ஆட்டம்

மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கும், கொக்குவில் இந்துக் கல்லூரிக்குமிடையிலான இரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிந்தது.

இப்போட்டியில் மானிப்பாய் இந்துவின் வீரர் பாஸ்கரன் சிறப்பாக ஆடி ஆட்டமிழக்காமல் 102 ஓட்டங்களைப் பெற்றார். இவரது ஆட்டத்தில் பன்னிரண்டு பவுண்டரிகளும், மூன்று ஸிக்சர்களும் அடங்கி இருந்தன.

முதலில் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி 4 விக்கட் இழப்பிற்கு 210 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டத்தை நிறுத்தியது. பாஸ்கரன் ஆட்டமிழக்காமல் 102, கணன் ஆட்டமிழக்காமல் 66 ஓட்டங்களைப் பெற்றனர். பார்த்திபராஜன் 2 விக்கட்டுக்களைப் கைப்பற்றினார்.

கொக்குவில் இந்துக் கல்லூரி அணி தனது முதல் இனிங்சில் 8 விக்கட் இழப்பிற்கு 95 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது போட்டி முடிவடைந்தது. மானிப்பாய் இந்துவின் பாஸ்கரன் 17 ஓவர்கள் பந்து வீசி 15 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கட்டுகளைக் கைப்பற்றினார். (மு)

## சென்றலைட்ஸ் விளை. கழகம்

இம் மாதம் 11 ஆம் திகதி நடைபெற்ற சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகத்தின் பொதுக் கூட்டத்தில் அதன் யாப்பு ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது.

கூட்டத்தில் பின்வருவோர் செயற்குழு உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர் :-

போஷகர் திரு. என். இராசரத்தினம், அதிபர், யாழ் மத்தியக் கல்லூரி, உ. ப. போஷகர் பேரா. கே. தெய்வேந்திரராஜா, தலைவர் மத்தியக்கல்லூரி பழைய மாணவர் சங்கம், தலைவர் திரு. எஸ். நடராசா, உபதலைவர்கள் திரு. கே. எஸ். பாலச்சந்திரன் திரு. ரி. ஆர். தர்மகுலசிங்கம், பொதுக் காரியதரிசி திரு. கே. மகேந்திரநாதன், துணைக் காரியதரிசி திரு. பி. விமலதாசன், பொருளாளர் திரு. ஜி எஸ். சாந்திகரன், கணக்காய்வாளர் திரு. பி. றஜீவன், நிர்வாக சபை அங்கத்தவர்கள் :- திரு. கே. கலாவண்ணன், திரு. டி. புரட்சிதாசன் திரு. எஸ். பிரேம்குமார், திரு. கே. டபிள்யு. விமலராஜா திரு. ஆர். நவரட்ணம் ஆகியோர்.


கிரிக்கெட் கப்டன் திரு. சி. என். மதிவதனன், காரியதரிசி திரு. எஸ் விமலதாசன்

உதைப்பந்தாட்டம் கப்டன் திரு. கே. கலாவண்ணன், காரியதரிசி திரு. வீ. கே. சண்முகலிங்கம்

கூடைப் பந்தாட்டம் கப்டன் திரு. எஸ். சதீஸ்குமார், காரியதரிசி திரு. ஆர். வசந்தகுமார்

மெய்வல்லுனர் பிரிவு கப்டன் திரு. எஸ். பாலக்குமார் காரியதரிசி திரு. எஸ். சதீஸ்குமார் (க)

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## லெப்டினட் துர்க்கா
(சச்சிதானந்தம் கமலாதேவி)

அன்னையின் மடியில்: 07 - 04 - 1965
தாயக மண்ணில்: 22 - 03 - 1988

● திதி: 31 - 03 - 1990 ●

வீரசுதந்திரம் வேண்டி நின்றயெம் வீரமுறும் துர்க்கா—உன் வீரக்கனவுகள் நிறைவேற வீரன் முருகனை வேண்டுகின்றோம்

**பெற்றோர், உற்றார், உறவினர், நண்பர்கள்.**

4ம் வட்டார[illegible] [சி-4071]

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## திரு. சண்முகலிங்கம் குமாரலிங்கம்
(விலை மதிப்பீட்டுச் சோதனையாளர்)
(Valuation Inspecter)

மலர்வு: 29 — 09 — 1926
உதிர்வு: 22 — 03 — 1987

ஆண்டுகள் மூன்று சென்றிடினும்
ஆருயிர்த் தலைவ நின்
நிமிர்ந்த நன்னடையும்
நேர்கொண்ட பார்வைதனையும்
நித்தமும் புன்னகை மாறா வதனத்தையும்
இன் சொல்லன்றி வேறு அறியா
இனிய நின் உயர் பண்புகளையும்
பாரில் நீபதித்த இனிய நினைவுகளையும்
பாசமுள்ள எம்நெஞ்சங்கள் நினைத்து ஏங்குதையா!

பாசமுடன் நினைவு கூரும்:
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரன்.

37, பாமன்கட லேன்,
வெள்ளவத்தை,
கொழும்பு - 6. [12077]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோப்பாய் - உடுவில் - வடமராட்சி கிழக்கு:
# தெரிவான பயிலுநர் ஆசிரியர்கள் விவரம்

யாழ்ப்பாணம் மார்ச் 22
கோப்பாய், உடுவில், வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பயிலுனர் ஆசிரியர்களாகத் தெரிவு செய்யப்பட்டோர் விபரம் வருமாறு:

## கோப்பாய்

**கிறிஸ்தவம் றோ. க. அல்லாதது,**
க. சுமதி- நாயன்மார்கட்டு-,

**தமிழ்–**
ந. மாலினி- அச்சுவேலி, பா. பிரதீபா- கல்வியன்காடு, தி. பிரியதர்சினி- அச்சுவேலி,

**கணிதம்-**
யோ. இந்திராணி- புத்தூர், க. செந்தில் குமாரன்- அச்சுவேலி,

**விஞ்ஞானம்–**
த. ஜெயபவானி- அச்சுவேலி இ. விமலினிதேவி- நீர்வேலி, பு. சிறீஸ்கந்தராஜா - வளலாய், த. பொன்மலர் - இடைக்காடு.

**ஆங்கிலம்–**
ப. வசந்தா தேவி - ஆவரங்கால், இ. இராஜ்குமார்- உரும்பிராய், த. கீதா- புத்தூர், வ. பாலேஸ்வரி- உரும்பராய் கிழக்கு, இ. லலிதாகுமாரி - கோப்பாய் தெற்கு, அ. பர்வபத்தினி-உரு. தெற்கு, இ. மஞ்சுளா-நீர்வேலி, செ. சுலோசனா - அச்சுவேலி, இ. பிரேமராணி - கோப்பாய் தெற்கு.

**உடற்கல்வி–**
சி. விமலா–அச்சுவேலிவடக்கு ந. சத்தியகலா- அச்சுவேலி, வே. வரதநாயகி- நீர்வேலி,

**சமூகக்கல்வி–**
ச. நாகலெட்சுமி- அச்சுவேலி சி. ரதி- கோப்பாய் தெற்கு க. ஜெயசௌரி- அச்சுவேலி,

**விவசாயம் -**
இ. ஜெயந்தி- சுன்னாகம், அ. பேரின்பநாயகம்- கோப்பாய்,

**ஆரம்பகல்வி–**
தா. மேரியோகராணி- உரும்பராய், ச. சாந்தினி- அச்சுவேலி வடக்கு, து. பூலோசரம்பை-அச்சுவேலி, மு. தவதேவி- நீர்வேலி, அ. இரங்சிதமலர்- கோப்பாய் தெற்கு, க. சசிகலா- ஆவரங்கால், ந. பிறேமா- அச்சுவேலி, செ. நிர்மலா- உரும்பராய், க. கலாலோஜினி- நீர்வேலி, இ. கேதீஸ்வரி- நீர்வேலி, வி. ஜெயலட்சுமி- நீர்வேலி, சி. லோகேஸ்வரி- நீர்வேலி, ம. நீற்றாசுதேவி- நாயன்மார் கட்டு, இ. உதயகலா- உரும்பராய், க. இரஞ்சனாதேவி கோப்பாய்தெற்கு, இ இராஜநாயகி-உரும்பராய், பொ. இல்லைநாயகி- கோப்பாய் வடக்கு, பொ. வரதகுலசிங்கம்- கோப்பாய் தெற்கு, ம. முகிர்தா-நீர்வேலி, நா. தனலட்சுமி- கோப்பாய் தெற்கு, மு. சுகுனாமினி- உரும்பராய் மேற்கு, த. மனோரஞ்சிதம்- கோப்பாய்வடக்கு, இ. இந்திரதேவி- அச்செழு, க. ஈஸ்வரி - புத்தூர், தி. உதயசூரியன்- ஊரெழு கிழக்கு, க. கமலராணி- அச்சுவேலி, ப. குமுதினி- உரும்பராய் தெற்கு,

**இந்துசமயம்–**
மா. பத்மாவதி- புத்தூர், க. மனோன்மணி- கோப்பாய், செ. தமிழரசி- கோப்பாய்,

**கிறிஸ்தவம் றோ. க**
சூ. ஐடாமாரி-அச்சுவேலி. ஜே. றெறெஜின் வசந்தி- அச்சுவேலி.

**சித்திரம்**
இ. வசந்தகுமாரி - கோப்பாய், து. மலர்மிதி - கோப்பாய். கு. துரைராஜா - கட்டைப்பிராய், ப. அனிசிறிலதா–அச்சுவேலி வடக்கு, திருமதி. அ. சிவயோகம்–உரும்பிராய் தெற்கு, தி. இரத்தினேஸ்வரி-அச்சுவேலி.

**சங்கீதம்**
ந, பத்மாசினி-கோப்பாய், திருமதி, ச. ஸ்ரீஸ்கந்தராஜா -அச்சுவேலி, ச. வசந்தா தேவி-நீர்வேலி, அ. கலைமதி -அச்சுவேலி தெற்கு. க. ராசம்மா கலைமதி-அச்சுவேலி, மா. வள்ளிக்கொடி- அச்சுவேலி.

**நடனம்**
திருமதி ய. செல்வகுமாரன்- உரும்பராய்கிழ, வா. கியாதா - உரும்பிராய், சி. தேவகுமாரி- அச்சுவேலி, க. ஜீவமோகன் - கோப்பாய், அ. மதினி - சுன்னாகம், செ. தயாவதி - உரும்பிராய், சி. சிவகலை - உரும்பிராய், திருமதி. அ. சூரியகலா-உரும்பிராய், பொ. சுகந்தினி- கோப்பாய், த. சுயாதா- அச்சுவேலி.

**வாழ்க்கைத் திறன்**
சோ. பகவதி - கோப்பாய் வடக்கு.

**மனையியல்**
து. கௌரி - புத்தூர், து. ஞானேஸ்வரி-புத்தூர்.

**வர்த்தகம்**
த. சத்தியபாமா-புத்தூர்.

**தட்டச்சு**
அ. பத்மாவதி - உரும்பிராய்.

**மரவேலை**
சி. தர்மரத்தினம்-நீர்வேலி

**உலோகவேலை**
இ. இராசகுலேந்திரன்- கோப்பாய்.

## உடுவில்

**ஆரம்பக்கல்வி**
சு. சித்தீஸ்வரி - இணுவில் கிழக்கு, அ. சொர்ணலிங்கம்- இணுவில் மேற்கு, த. மனோகரி–சுன்னாகம், ஐ. புஸ்பலதா-சுன்னாகம், தி. சுகுமாரன்-மானிப்பாய், சி. நிர்மலாதேவி-சுன்னாகம், க. வாசுகி - சுன்னாகம், இ. கிருஸ்னநந்தி - உடுவில் கிழக்கு, நா. சிவநேசன் -கொக்குவில், ப. விஜயகுமாரி-இணுவில், மா. புவனேஸ்வரி-இணுவில் கிழக்கு, ந. பவன்-இணுவில் மேற்கு, ந. குணரத்தினம்-ஏழாலை, சி. விக்கினேஸ்வரி-சுன்னாகம், கு. விஜயகலாநிதி- ஏழாலை தெற்கு, இ. சிவயோகம்-கட்டுவன் தெற்கு. கு. வாசுகி-தாவடி வடக்கு, தா. பாலசுப்பிரமணியம்-புன்னாலைக்கட்டுவன், மு. செல்வஸ்தரன்-சுன்னாகம்.

**இந்துசமயம்**
சொ. வாசுகி-இணுவில் மேற்கு.

**கிறிஸ்தவம் றோ. க**
வ. அ ஜெலஸ்தினா - சுன்னாகம், எ. ஜோ. செல்வம்- உடுவில்

**கிறிஸ்தவம் றோ. க. அல்லாதது**
ஜே. ஹரிசன் மரியதாசன்- சுன்னாகம், ஜெ. ஜெயமோகன் - உடுவில்

**தமிழ்**
சு. விஜயலட்சுமி - ஏழாலை மேற்கு, இ. சிவனேஸ்வரி - இணுவில் தெற்கு

**கணிதம்**
சி தி. ஜெகதீஸ்வரன் - இணுவில் மேற்கு

**விஞ்ஞானம்**
க. கந்தையா - இணுவில் மேற்கு, க. தயாழினி - உடுவில் கிழக்கு, சி. வளர்மதி - இணுவில் தெற்கு

**ஆங்கிலம்**
திருமதி. வ. அரசரத்தினம் - உடுவில், ப. ரமணி - ஏழாலை மேற்கு, நா. ராஜன் உடுவில், ரா. சத்தியதேவி - உடுவில் வடக்கு, தி. ரவீந்திரநாதன் - ஏழாலை.

**உடற்கல்வி**
சி. யோசலை - ஏழாலை

**சமூகக்கல்வி**
ஐ. பத்மரஞ்சினி - சுன்னாகம, ந. சாந்தகௌரி - ஏழாலை, சி. புஸ்பம் - சங்குவேலி தெற்கு, அ. கமலாதேவி - சுன்னாகம்

**சித்திரம்**
கு. சூரியகுமார் - ஏழாலை, இ. மேரி ரஞ்சித் - ஏழாலை, சி யோகேஸ்வரி - சுன்னாகம் தெ. கலைச்செல்வி - சுன்னாகம் தெற்கு. அ. அன்ரன் கிறேசியன் - சுன்னாகம்

**சங்கீதம்**
கலைமதி சின்னராசா - இணுவில் தெற்கு. சு. சுலோசனா - இணுவில் கிழக்கு, மா. வினிதா - சுன்னாகம், சி. லோகேஸ்வரி - மல்லாகம்

**நடனம்**
க. ராஜினி - மானிப்பாய், க. பத்மினிதேவி- சுன்னாகம் சி. சிவமாலா - இணுவில்- மேற்கு. ந. அருணாதேவி- இணுவில் தெற்கு, பெ. ஜெயராணி - உடுவில், அ. கலாநிதி இணுவில்.

**வாழ்க்கைத்திறன்**
நா. லலிதா - சுன்னாகம்.

**விவசாயம்**
மா. விமலாதேவி - சுன்னாகம்.

**மனையியல்**
இ. றோகினி - சுன்னாகம், கு. கிருபா - ஏழாலை.

**வர்த்தகம்**
திருமதி இ. இரஞ்சனா- ஏழாலை மேற்கு, இ. சிவகலா - சுன்னாகம்.

**மரவேலை**
ஜே. அன்ரன் மரியநாதர்- சுன்னாகம்.

**சமஸ்கிருதம்**
ச. சாந்தினி - சுன்னாகம்.

## வடமராட்சி கிழக்கு

**ஆரம்ப கல்வி**
சி. வனிதா மலர் - குடத்தனை, க. கனகரெட்னேஸ்வரி-குடத்தனை, மே. ப. ஞானப்பிரகாசம்-தாளையடி, பி. இராசகுமாரி - குடத்தனை, இ. சகுந்தலா - முள்ளியான், சு. சத்தியசீலா- தாளையடி, வீ. ஜெயராணி- முள்ளியான், செ. சத்தியபாமா - தாளையடி, பூ. தர்மகுலேந்திரன் - தாளையடி, செ. புஸ்பறணிதா தாளையடி, பொ. பொன்னம்பலம் - ஆழியவளை, மூ. வ. நின்மதிராஜா - தாளையடி.

**சமூகக்கல்வி**
திருமதி ச. திரவியராசா- தாளையடி, வ. சிவபாக்கியம் - தாளையடி, கி. சாந்தகுமார்-தாளையடி.

**விஞ்ஞானம்**
க. சிவசுப்பிரமணியம்- தரவை, வீ. இந்திரலிங்கம்- முள்ளியான்.

**தமிழ்**
சி. நந்தகுமாரி- தாளையடி, ம. நெசிற்றா-தாளையடி.

**விவசாயம்**
த. மங்கயற்கரசி - வந்திரான்.

**சித்திரம்**
வி. சாந்தினி-குடத்தனை.

**சங்கீதம்**
ஸ். ஹெலன்பிளசிடஸ் - தாளையடி.

**ஆங்கிலம்**
மே. ஏ. மோசஸ்-தாளையடி, சி. சுமந்திராதேவி- செம்பியன்பற்று, யோ. மேரி விக்டோரியா - முள்ளியான், அ. டொ. அரியரஞ்சன்- தாளையடி, வீ. விஸ்வராணி- முள்ளியான். (இ-3)


## வானொலி நிகழ்ச்சிகள்

22 -03 -1990

5.00 நாதாஞ்சலி
5.05 தோத்திரமாலை
5.30 சாயிபஜன்
5.45 சைவநற்சிந்தனை
5.50 இஸ்லாமிய நற்சிந்தனை
5.55 பக்திப் பாடல்
6.00 வர்த்தக சேவை
6.30 செய்திகள்
6.40 செய்தித்தாள் கண்ணோட்டம்
7 00 வர்த்தக சேவை
7.30 பாடசாலைக் கூட்ட நிகழ்ச்சி
7.45 மாகாணச் செய்திகள்
7.50 வர்த்தக சேவை
8.00 லயவிந்யாசம்
8.15 மெல்லிசைப் பாடல்கள்
8.30 சுவாரா
9.00 வர்த்தக சேவை
10.00 இசையமுதம்
10.30 தவில் கச்சேரி
10.45 பக்திப் பாடல்கள்
11.00 வயலின்
12.00 வர்த்தக சேவை
12.45 செய்திகள்
1.00 வர்த்தக சேவை
6.00 செய்திகள்
6.15 இந்து சமயப் பேச்சு
6.30 வளரும் பயிர்
6.45 பாவளம்
7.00 கிராம சஞ்சிகை
7.30 மெல்லிசைப் பாடல்கள்
7.50 உலகச் செய்திகள்
8.00 முஸ்லிம் நிகழ்ச்சிகள்
9.00 செய்திகள்
9 20 பக்திப் பாடல்கள்
9.30 சலந்துரையாடல்
10.00 நாதஸ்வரம்
11.00 ஒலிபரப்பு முடிவு.



## ஊற்று நிறுவனம்
## பதவி வெற்றிடங்கள்

எமது நிறுவனம் ஐம்பது பின்தங்கிய கிராமங்கள் தற்சார்பு வளர்ச்சித் திட்டத்தை அமுல் செய்கின்றது. சமூக-பொருளாதார வளர்ச்சிக்கு பாடுபடக் கூடிய, பொதுப்பணியில் ஆர்வமும், அனுபவமுள்ள உத்தியோகத்தர்கள் உடனடியாகத் தேவை.

1. திட்ட இணைப்பாளர்
கிராமிய மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களை அபிவிருத்திப் பாதைக்கு அணி திரட்டக் கூடியவராயிருத்தல் வேண்டும். 45 வயதிற்கு மேற்படாத பொருளியல், சமூகவியல் பட்டதாரிகட்கு முன்னுரிமையுண்டு. க. பொ. த. உயர்தர வகுப்பில் கல்வி பயின்று சமூகப் பணியில் ஈடுபட்டுள்ளோரும் விண்ணப்பிக்கலாம். அரசாங்க சேவை, மற்றைய சேவைகளிலிருந்து நீங்கியவர்களும் இப்பணிக்குத் தகுதியுடையவர்களாயிருப்பின் கவனிக்கப்படுவார்கள்.

2. கொத்தணித் தொண்டர் (தென்மராட்சி)
தெரிவு செய்யப்பட்ட கிராமங்களில் இளைஞர் கழகங்களை அமைத்து எமது அபிவிருத்தித் திட்டங்களைக் கழகங்களூடாகச் செயற்படுத்துவதே முக்கிய பணியாகும்.
வரணி தொடக்கம் கச்சாய் வரையிலுள்ள கிராமங்களில் வசிக்கும் 35 வயதிற்கு மேற்படாத க. பொ. த. சாதாரண வகுப்பில் கல்வி பயின்றோர் விண்ணப்பிக்கலாம்.

3. கோழிக்குஞ்சு வளர்ப்பு மேற்பார்வையாளர்
கிராமங்களுக்கு விநியோகிப்பதற்கு ஒரு நாட் குஞ்சுகள் ஒரு மாதம் வரை பருத்தித்துறைப் பகுதியில் பத்து வீடுகளில் வளர்க்கப்படும். இதை மேற்பார்வை செய்யக் கூடியவராதல் வேண்டும். குஞ்சு வளர்ப்பில் ஆர்வமும், அனுபவமும் உள்ள 35 வயதிற்கு மேற்படாத இளைஞர், யுவதிகள் விண்ணப்பிக்கலாம். பருத்தித்துறைப் பகுதியில் வசிப்பவர்கட்கே உகந்ததாகும்.
விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்கள், சான்றிதழ்களுடன் 26ம் அல்லது 28ம் திகதிகளில் காலை 9.00 மணி-பி.ப. 1.00 மணி வரை திட்டச் செயலகத்திற்கு முதலாம் நேர்முகப் பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும்.

தலைவர்
ஊற்று நிறுவனம்

திட்டச் செயலகம்,
மந்திகை - புலோலி.
[12089]


### தமிழ்ப் போராளி...

கள் என்றும் எனவே தான் அவர்கள் தமிழ்நாட்டில் இறங்காதபடி திருப்பி அனுப்பப்பட்டார்கள்'' என்றும் கூறினார்.

''அகதிகளாக வருபவர்களுக்கு தமிழ்நாட்டில் முதலிடம் அளிக்கப்படும். 1983 முதல் சுமார் ஒரு லட்சம் இலங்கைத் தமிழர் அகதிகளாக வந்தனர். இவர்களில் 18 பேர் மட்டுமே தங்களை அகதிகளாகப் பதிவு செய்து கொண்டனர். இலங்கைக்குத் திரும்பாத அகதிகளில் பலர் தமிழ்நாட்டு மக்களுடன் ஒன்றுபட்டு மாநிலத்தின் பல்வேறு ஊர்களில் வாழ்ந்து வருகிறார்கள்'' என்றும் கூறினார். (உ-எ)

## நிபந்தனையுடன்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவர் கூறியதாவது:—

அரசாங்கம் ஆறாவது திருத்தத்தை நீக்க விரும்பினாலும் அதற்கு தற்போது ஆளும் ஐக்கியத் தேசியக்கட்சிபிதும்ஈழவர் ஜனநாயகமுன்னணி, தமிழர் விடுதலைக் கூட்டணி (ஈ. பி. ஆர். எல் எவ், ரெலோ உட்பட) ஆகியவற்றினதும் எம். பிக்களுமாக மொத்தம் 147 பேரின் ஆதரவுதான் தற்போது நாடாளுமன்றில் இருக்கிறது.

இச்சட்டத்தை நீக்க ஆகக் குறைந்தது மேலும் மூன்று எம். பிக்களின் ஆதரவு அரசுக்குத் தேவை.

ஆறாவது திருத்தம் நீக்கப்படுவதை ஸ்ரீ. ல. சு. கட்சியும், மக்கள் ஐக்கிய முன்னணியும் கடுமையாக எதிர்க்கின்றன. அவை இதற்கு ஆதரவளிக்கப் போவதில்லைஎன்பது கண்கூடு.

நாடாளுமன்றத்தில் எஞ்சியிருக்கும் கட்சிகள் முஸ்லிம் காங்கிரஸும், ஐக்கிய சோசலிஸ அணியுமே.

ஐக்கிய சோசலிஸ அணி இந்த விடயத்தில் இதுவரை மௌனம் சாதித்து வருகிறது. மேலும் அவர்களிடம் உள்ள மூன்று எம். பிக்களில் இதுவரை இருவர் மட்டுமே நியமிக்கப்பட்டிருக்கின்றனர், மூன்றாவது எம். பி பதவி இதுவரை நிரப்பப்படவில்லை.

ஆகவே ஆறாவது திருத்தத்தை நீக்குவதற்கு நாடாளுமன்றத்தில் நான்கு எம். பிக்களைக் கொண்டிருக்கும் முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவு அரசுக்குக் கட்டாயம் தேவை.

இந்த நிலையில் பெரும்பான்மை சிங்களவர்களினதும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி ஆகியவற்றினதும் எதிர்ப்புக்கு மத்தியில் முஸ்லிம் காங்கிரஸ் ஆறாவது திருத்தத்தை நீக்குவதற்கு ஆதரவளிக்க வேண்டுமா?

எமது கட்சி முஸ்லிம் நலன்களை நோக்காகக் கொண்டது.

இவ்வளவு பிரச்சினைகளுக்கும் மத்தியில் முஸ்லிம்களின் நலனை சிந்தியாது வெறுமனே இந்தத் திருத்தத்தை ஆதரிக்க முடியுமா?

ஆகவேதான் நிபந்தனையுடன் ஆதரவு தர நாம் முன்வந்தோம் — என்றார். (உ-2)

## வவுனியாவில்---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொறுப்பாளர் தினேஷ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அன்னை பூபதி தனது தியாகத்தின் மூலம் மக்களின் தேசிய விடிவுக்கான போராட்டம் மக்களின் அபிமானத்தையும் ஆதரவையும் பெறுவதன் மூலமே ஸ்தாபன ரீதியாக வெற்றி காண முடியும் என்பதை நிரூபித்துவிட்டார்.

அவரது தியாகம் காலம் காலமாக நின்று நிலைக்கவும் சர்வதேச ரீதியாகவும் வெளிப்படுத்தப்படுவதற்கும் எம்மாலானவற்றைச் செய்யவேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். (ஒ-164)

## முதல்வர்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

டன் சமர்ப்பித்திருக்கிறார்.

இந்த விடயம் குறித்து ஜனாப். இஸ்ஸதீன் உதயனுக்குத் தெரிவித்ததாவது:-

மாகாணசபைக்கு இப்போது முதலமைச்சர் ஒருவர் இல்லை. ஆனால் மாகாண சபை இன்னமும் இருக்கிறது. அது கலைக்கப்படவில்லை.

ஆகவே மாகாணசபைஇருக்கும்போது, மாகாண முதல்வரின் வேண்டுகோளின்படிதான் ஆளுநர் மாகாணசபைக்கு உரிய பதவிகளை நிரப்ப வேண்டும்.

ஆனால் மாகாண முதல்வர் ஒருவரின் வேண்டுகோள் இன்றி மாகாணசபையின் கீழ் பணிபுரிய ஏழு உதவிச் செயலாளர்களை ஆளுநர் நியமித்திருக்கிறார். இது சட்ட விரோதமானதாகும்.

மாகாணசபையின் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் இன்னமும் சபை உறுப்பினர்களாகவே இருக்கிறார்கள். அவர்களில் ஒருவரை முதலமைச்சராக பதவியேற்குமாறு ஆளுநர் கோருவதற்கு சட்டத்தில் இடமுண்டு.

அப்படிச் செய்ய ஆளுநர் மறுத்தால் மேன்முறையீட்டு நீதிமன்றில் அல்லது உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க தயங்க மாட்டோம்—என்றார். (உ-2)

## ஆசிரியர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

த்தை நியமனம் பெறும் ஒவ்வொருவரும் கையெழுத்திட்டு கல்விப் பணிப்பாளருக்கு ஒப்படைக்கவேண்டும்.

அதன் பின்னரே நியமனக் கடிதம் வழங்கப்படுவதாகத் தெரியவந்தது (உ)

### ஐ. நா. அகதிகள் ஸ்தானிகராலய
## மன்னார் அலுவலகம் மாத முடிவில் மூடப்படும்

யாழ்ப்பாணம், மார்ச். 22

ஐ. நா. அகதிகள் ஸ்தானிகராலயத்தின் மன்னார் அலுவலகம் இம்மாதத்துடன் மூடப்படவிருக்கிறது.

கடந்த காலங்களில் இடம்பெற்ற வன்செயல்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணத் திட்டங்களை செயல்படுத்தும் நோக்கத்துடன் ஐ. நா. அகதிகள் ஸ்தானிகராலயம் மன்னார், வவுனியா, மட்டக்களப்பு, திருமலை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் காரியாலயங்களை திறந்திருந்தது.

இதன்படி முதற்கட்டமாக மன்னார் காரியாலயம் மூடப்படுகிறது, (உ-3)

## ஒரிஸ்ஸாவில் 1,617 அகதிகள்!

சென்னை, மார்ச் 22

ஒரிஸ்ஸா மாநிலத்துக்கு இதுவரை ஆயிரத்து 617 ஈழத் தமிழ் அகதிகள் வந்திருக்கின்றனர். அவர்களுக்கு தற்காலிகமாகவே தஞ்சம் அளிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் விரைவில் திரும்பிச் சென்று விடுவார்கள்.

—இப்படி ஒரிஸ்ஸா முதல்வர் பிஜு பட்நாயக் நேற்று சட்டசபையில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார். (உ)

## ஆயுதங்களுடன்---

ஏனைய இராணுவ பாணி வாகனங்களை மறித்துச் சோதனையிடவும் அதுபோல தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் தங்களுடையதல்லாத ஏனைய இராணுவ பாணி வாகனங்களின் நடமாட்டத்தை மறித்துச் சோதனையிடவும் இருதரப்பினரும் பரஸ்பரம் ஒத்துக் கொண்டுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை திருகோணமலை கடற்படைத் தளத்தில் விடுதலைப் புலிகள் இயக்கப் பிரதிநிதிகளுக்கும் இலங்கை அமைச்சர் ஹமீது தலைமையிலான அரசுக் குழுவிற்கும் இடையே நடைபெற்ற பேச்சுக்களின்போது இதுசம்பந்தமான உடன்பாடு காணப்பட்டதாகவும் அந்தச் செய்திகள் தெரிவிக்கின்றன. (ஒ-எ)


THANK YOU

May the Sacred Heart of Jesus be adored, glorified loved and treasured throughout the world. Sacred heart of Jesus have mercy on us. St. Jude helper of helpless and worker of miracles pray for us. Thanks for prayers answered.

(C-4075)



31 ஆம் நாள் நினைவஞ்சலி



செல்வி லதா அருணாசலம்

பிறப்பு: 23- 11- 1970
இறப்பு: 20- 02- 1990

அன்பின் உருவமாய், பண்பின் இருப்பிடமாய் பாசத்தின் பிறப்பிடமாய்த் திகழ்ந்து எம்மை துயரத்தில் ஆழ்த்தி விட்டு இமைப் பொழுதில் இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வமே!

உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றென்றும் இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

அன்னாரின் ஈமக்கிரியைகளின் போது பங்கு கொண்டோருக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியோர்க்கும், பலவழிகளிலும் உதவிகள் செய்தோருக்கும் எமது இதயங்கனிந்த நன்றியறிதலை தெரிவிக்கின்றோம்.

அன்புப் பெற்றோர், பேத்தி, சகோதரர்கள், உற்றார், உறவினர்கள்.

55/4, அம்பலவாணர் வீதி,
அத்தியடி.
(12090)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NESON'S
FUNERAL UNDERTAKERS
FLORIST
CASKET EMBALMING
FUNERAL COACHES
No: 563, HOSPITAL ROAD,
VEMBADI JUNCTION JAFFNA.

உதயன்

22 - 03 - 1990 வியாழக்கிழமை

அந்தியகால சேவைக்கு உங்கள் அருகிலேயே
இருக்கும் அன்பன்
''நேசன்ஸ்''
★ பிரேதப் பெட்டிகள்
★ ஊர்வல வாகனம்
★ மலர் வளையங்கள்
★ எம்பாமிங்
★ நேசன்ஸ் ★
(வேம்படிச் சந்தி)
563, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.





அண்மையில் இலங்கை வந்திருந்த தமிழக காந்தி காமராஜ் காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு ப. நெடுமாறன் தமிழகம் திரும்பும் முன்னர் விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. வே. பிரபாகரனைச் சந்தித்தபோது எடுக்கப்பட்ட படங்களைக் காணலாம். படத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் திரு. கோபாலசாமி மகேந்திரராஜாவும் (மாத்தயாவும்) காணப்படுகிறார்.

## வேலை மறிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 22

தபால் திணைக்களத்தின் யாழ் பிரிவில் கடமையாற்றும்சமயாசமய ஊழியர்கள் சில கோரிக்கைகளை முன் வைத்து இன்று முதல் வேலை மறிப்புப் போராட்டத்தில் ஈடுபடவிருப்பதாக அறிவித்திருக்கிறார்கள்.

ஒரிரு மாதங்களுக்கு முன்னர் வேலையில் சேர்ந்த சமயாசேமய ஊழியர்களுக்கு ஒழுங்காக வேலை வழங்கப்படுவதாகவும் ஆனால் ஒருவருடத்திற்கு முன்பே சேர்க்கப்பட்டவர்களுக்கு ஒழுங்காக வேலை வழங்கப்படுவதில்லை என்றும் சமயாசமய ஊழியர்களின் சார்பில் வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரம் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ உ ]

வண். வட மேற்கு, கோண்டாவில் கிழக்குக்கு

## சனி, ஞாயிறில் நிவாரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 22

இலங்கை வங்கி, யாழ் ஸ்ரான்லி வீதிக் கிளையில் எதிர்வரும் 24 ஆம், 25 ஆம் திகதிகளில் (சனி, ஞாயிறு) மீளக்குடியமர்தல் இரண்டாம் கட்ட நிவாரணம் வழங்கப்பட இருக்கிறது.

சனிக்கிழமை வண்ணார் பண்ணை வடமேற்கைச் (ஜே/49) சேர்ந்த ஆயிரத்து 265 குடும்பங்களுக்கும், ஞாயிற்றுக்கிழமை கோண்டாவில் கிழக்கைச் (ஜே/57) சேர்ந்த ஆயிரத்து 394 குடும்பங்களுக்கு இந்த நிவாரணம் வழங்கப்படும்.

## ரயிலில் மட்டக்களப்பு செல்ல யாழ். நகரில் டிக்கற் பெறலாம்

யாழ்ப்பாணம், மார்ச் 22

யாழ்ப்பாணத்தில் இருந்து மட்டக்களப்புச் செல்ல யாழ்-ரயில் நிலையத்தில் 'டிக்கட்' பெற முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு டிக்கட் பெறுபவர்கள் மாகோவில் இருந்து அதிகாலை 4 மணிக்கு மட்டக்களப்பு செல்லும் சரக்கு ரயிலுடன் இணைக்கப்படும் பெட்டிகள் மூலம் பயணத்தைத் தொடர முடியும். அதற்கு வசதியாக இங்கிருந்து இரவு செல்லும் தபால் ரயிலில் பிரயாணம் செய்யலாம். அந்த ரயில் அதிகாலை 1 - 33 மணிக்கு மாகோவை அடையும்.

மாகோவில் இருந்து அதிகாலை புறப்படும் அந்த சரக்குரயில் காலை 10 மணிக்கு மட்டக்களப்பை அடையும் என அறிவிக்கப்பட்டது.

இந்த ரயில் மூலம் பொதிகளும் அனுப்ப முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

★ வடக்கு - கிழக்கில்

# 50 ஆயிரம் சிறார் மன நிலைபாதிப்பு!

யாழ்ப்பாணம் மார்ச், 22

கடந்த கால வன்செயல்களினால் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 50 ஆயிரம் சிறார்களின் மனோநிலை பாதிக்கப்பட்டிருக்கிறது.

வடக்கு, கிழக்கு பாதிப்புகள் குறித்து புள்ளிவிபரங்களைத் திரட்டி வரும் ஐ. நா. அபிவிருத்தித்திட்ட இணைப்பாளர் திரு. கே. சற்குணலிங்கம் இத்தகவலை உதயனுக்குத் தெரிவித்தார்.

அவர் திரட்டியுள்ள புள்ளி விபரங்களின் படி ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் சிலவற்றின் விபரம் வருமாறு:-

★ 35 ஆயிரம் சிறார்கள் தம் பாதுகாவலர்களை இழந்துள்ளனர்.

★ இராணுவ நடவடிக்கைகளால் 25 ஆயிரம் விதவைகளும் சிறார்களும் தம் வீட்டு உழைப்பாளியை இழந்துள்ளனர்.

★ 60 ஆயிரம் பேர் இக்காலகட்டத்தில் காயமடைந்துள்ளனர்.

★ உடல்ரீதியாகவும் உளரீதியாகவும், ஊனமடைந்தவர்கள் ஒரு இலட்சம் பேர்.

★ கற்பழித்தல், துன்புறுத்தல் ஆகியவற்றால் பாதிப்படைந்த பெண்கள்-6 ஆயிரம் பேர்.

★ மனக்குழப்ப நிலையில் 25 ஆயிரம் பேர் உள்ளனர்.

★ பயத்தால் வெளிநாடு சென்று தஞ்சம் அடைந்துள்ள இளைஞர்கள் ஒரு லட்சம் பேர்.

★ போதைவஸ்து, மது ஆகியவற்றுக்கு அடிமையானவர்கள் எண்ணிக்கை 50 ஆயிரம்.

★ பிள்ளைகளால் கவனிக்கப்படாத முதியவர்கள் எண்ணிக்கை 10 ஆயிரம்.

★ நாட்டுப் பிரச்சினையால் கல்லூரிப் படிப்பை அரைவாசியில் விட்டவர்கள் 4 லட்சம் பேர். பல்கலைக்கழக அனுமதியின்றி 15 ஆயிரம் பேர் காத்திக்கிறார்கள். பரீட்சைக்காக 15 ஆயிரம் பேர் காத்திருக்கிறார்கள்.

★ வேலையற்று இருப்பவர்கள் ஏழு இலட்சம் பேர்.

★ வீடுகள் இழந்தவர்கள் இரண்டு இலட்சம் பேர்.

★ பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டவர்கள் ஏழு இலட்சம் பேர்.

( க - 3 )

## ஏப். முதலாம் திகதிக்கு பின் நிவாரணம் கிடைக்காது!

யாழ்ப்பாணம், மார்ச் 22

யாழ்ப்பாணம், கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இதுவரை மீளகுடியமர்தல் இரண்டாம் கட்ட நிவாரணம் பெறாதவர்கள் எதிர்வரும் முதலாம் திகதிக்கு முன் வங்கியில் பெற்றுக் கொள்ள வேண்டும்.

இல்லையேல் பணம் செயலகத்துக்குத் திரும்பிவிடும். அதன் பின்னர் சம்பந்தப்பட்டவர்கள் நிவாரணத்தைப் பெற முடியாது.

ஏப்ரல் முதலாம் திகதிவரை ஆஸ்பத்திரி வீதி இலங்கை வங்கிக் கிளையில் வங்கி அலுவலக நேரத்தில் இந்தப் பணத்தை எப்போதும் பெற்றுக்கொள்ளலாம்.

இவ்வாறு யாழ். அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

(ஒ-க)

## மாகாணசபை ஊழியர் வேலைக்குத் திரும்புகின்றனர்

யாழ்ப்பாணம், மார்ச் 22

திருகோணமலை மாகாண சபை அலுவலகங்களில் பணி புரிரிம் ஊழியர்களில் அனேகமானோர் வேலைக்குத் திரும்பிவிட்டதாகத் திருமலைச் செய்திகள் தெரிவித்தன.

எனினும் மாகாணசபை அமைச்சுக்களின் செயலாளர்கள் பன்னிரண்டு பேரில் நான்கு பேர் மட்டுமே தற்போது சமுகமளித்து வருகின்றனர்.

மாகாணசபை முதல்வரும் ஏனைய உறுப்பினர்களில் பெரும்பாலானோரும் திருமலையைவிட்டு வெளியேறியதை அடுத்து மாகாணசபையில் பணிபுரியும் ஊழியர்களும் வேலைக்கு சமூகமளித்திருந்தனர்.

தற்போது நிலைமை சீரடைந்து வருவதை அடுத்து ஊழியர்கள் வேலைக்குத் திரும்பத் தொடங்கியுள்ளனர்.

எனினும் அமைச்சுச் செயலாளர்கள் கடமைக்கு வரததால் வேலை நடைபெறுவது பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

(உ-3)

யாழ் ஆஸ்பத்திரியின்

## புனரமைப்புக்கு உதவாதது பற்றி அரச அதிபர் விளக்கம்

யாழ்ப்பாணம், மார்ச் 22

புனர்வாழ்வு, புனரமைப்பு வேலைகளுக்கு உதவி வழங்கும் வெளிநாட்டு நிறுவனங்கள் எதுவும் சுகாதாரத் துறைக்குப் பணஉதவி செய்யவில்லை. அதனாலேயே யாழ். போதனா வைத்தியசாலைப் புனரமைப்புக்கு நிதி வழங்கப்படவில்லை.

யாழ் அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அட்பிரட் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

புனர்வாழ்வு அமைச்சு இவ்விடயம் தொடர்பாக வெளிநாட்டு நிறுவனங்களுடன் தொடர்புகொண்டுள்ளது. நிதி கிடைத்தவுடன் உதவி வழங்கப்படும் - இப்படி அவர் கூறினார். (ஒ-3)

## பயிலுநர் ஆசிரியர் கவனத்துக்கு

கோப்பாய் உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலிருந்து தெரிவான பயிலுநர் ஆசிரியர்களை நாளை வெள்ளிக்கிழமை திணைக்களத்தில் சமுகமளிக்குமாறு கோரப்பட்டுள்ளது,

வடமராட்சி கிழக்கில் இருந்து தெரிவானவர்களை நாளை மறுதினம் சனிக்கிழமை வருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-3)

## காங்கேசனிலும் புலிகளின் பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 22

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியில் இன்று வியாழக்கிழமை மாலை 7 மணிக்கு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின்பொதுக் கூட்டம் ஒன்று நடைபெறுகிறது.

கூட்டத்தின் இறுதியில் ''நடந்து வந்த பாதை'' வில்லிசையும், விடியலைத் தேடுவோம் இசை நாடகமும் நடைபெற இருக்கின்றன.

[ ஒ ]

## பிறப்பு, இறப்பு, விவாக சான்றிதழுக்கான விண்ணப்பம் ஏற்பது இடை நிறுத்தப்படும்!

யாழ்ப்பாணம், மார்ச் 22

யாழ் - அரசாங்க செயலகத்தில் பிறப்பு, இறப்பு விவாகச்சான்றிதழ் பெறுவதற்கு விண்ணப்பங்கள் ஏற்பது எதிர்வரும் 26 ஆம்திகதி முதல் நிறுத்தப்படும்.

யாழ் அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட்மேற்கண்டவாறு அறிவித்துள்ளார்.

இது சம்பந்தமாக மேலதிக பதிவாளர் திரு.ஜே.என். போமன் உதயனுக்குத் தெரிவித்ததாவது:.

ஜனவரி முதல் நேற்று வரை 16 ஆயிரம் விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன. கடந்த வருட விண்ணப்பங்களுடன் சேர்த்து 30 ஆயிரம் விண்ணப்பங்கள்தேங்கிக்கிடக்கின்றன.

இந்த விண்ணப்பங்களுக்கான பிரதிகள் வழங்க புத்தகங்கள் இல்லை. இந்தபுத்தகங்களை எடுத்துவர அதிகாரி கொழும்புக்கு சென்றுள்ளார்.

புத்தகங்கள் வந்த பின் தேங்கியிருக்கும் விண்ணப்பங்களுக்கு பிரதி கொடுக்க ஒரு மாதத்துக்கு மேல் செல்லும். அந்த வேலைகளை விரைவாக செய்து முடிக்கவே விண்ணப்பங்கள் ஏற்பது நிறுத்தப்படுகிறது — என்றார்.

[ஒ-3)

## நகரப் போக்குவரத்து ஒழுங்கில் மாற்றம் வரும்

யாழ்ப்பாணப் மார்ச் 22

யாழ். நகரப்பகுதியில் அமுல்செய்யப்பட்டுவரும் வீதிப் போக்குவரத்து ஒழுங்கு நடைமுறைகளில் மக்கள் நலன் கருதி சில மாற்றங்கள் செய்யப்படயிருக்கின்றன. யாழ். மாநகரசபை உயர் அதிகாரி ஒருவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

புதிய வீதி ஒழுங்குகளினால் சில இடங்களில் மக்களுக்கு அசௌகரியங்கள் ஏற்படுவது சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. அவற்றை நிவர்த்தி செய்யும் வகையில் சில மாற்றங்கள் விரைவில் அமுல் செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

புதிய ஒழுங்கு வீதிகளுக்கு பொதுமக்கள் ஆதரவு குமுஅளவில் உள்ளதாகக் கூறிய அந்த அதிகாரி, இந்த ஒழுங்கு வீதிகளைக் கண்காணிக்க நியமிக்கப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை 32 ஆக அதிகரிக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார். (உ- 3)

## விபத்தில் இருவர் காயம்

யாழ்ப்பாணம், மார்ச் 22

நேற்று காங்கேசன்துறை வீதி பூநாறி மடத்தடியில் மோட்டார் சைக்கிளும், சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானதில் வீ. தவராசா [வயது 62] [illegible] ராசா ஆகியோர் [illegible] தனர். (ஒ-9)

## தமிழகத்தில் ஆயுத பயிற்சியா? பொலிஸார் நடவடிக்கை எடுப்பர்

### முதல்வர் கருணாநிதி கூறுகிறார்

சென்னை, மார்ச் 22

தமிழ்நாட்டின் சில மாவட்டங்களில் ஆயுதப் பயிற்சி வழங்கப்படுவதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன. இதில் உண்மை உண்டா?

இவ்வாறு மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சி எம். எல். ஏ. திரு. வரதராஜன் நேற்று சட்டசபையில் கேள்வி எழுப்பினார்.

'பத்திரிகைகளில் இதுசம்பந்தமான பல செய்திகள் வெளிவந்துள்ளன. [illegible] உரிய விசாரணைகள் நடத்தி தக்க [illegible]பர்'—என்று முதலமைச்சர் கருணாநிதி பதிலளித்தார்,

(—ஓஎ)

## காலக்கெடு

கொழும்பு, மார்ச் 22

எஞ்சியுள்ள தீவிரவாதிகள் தங்களிடம் உள்ள ஆயுதங்களை ஒப்படைக்க அரசு இறுதிக் காலக்கெடு ஒன்றை இவ்வாரம் அறிவிக்க இருப்பதாகத் தெரியவருகிறது.

சரணடையும் தீவிரவாதிக[illegible] புனர்வாழ்வளிக்க அரசு ஏற்பாடு செய்துள்ளது. [illegible] கெரிந்தகதே (ஒ - எ)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பத்தினிப்பிள்ளை சிவசம்பு (குமாரசாமி)

[மகளிர் மகா வித்தியாலயம், சாவகச்சேரி]

சாவகச்சேரியில் சங்கத்தானையைச் சேர்ந்த திருமதி பத்தினிப்பிள்ளை சிவசம்பு [குமாரசாமி] அவர்கள் 20-03-1990 அன்று காலமாகிவிட்டார்.

இவர் திரு. கே. சிவசம்பு [குமாரசாமி] கல்வித் திணைக்களம் கிளிநொச்சி அவர்களின் அன்பு மனைவியும், செல்வி லலிதா [சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவி], செல்வன் லலிதகுமார் [சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவன்] ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 22-03-1990 வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நண்பகல் 12-00 மணியளவில் குடும்ப மயானத்துக்கு தகனத்துக்காக எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கே. சிவசம்பு [குமாரசாமி]
இந்துக் கல்லூரி ஒழுங்கை,
சாவகச்சேரி.

[2940]

### திருமதி நேசரட்னம் நவரட்ணராஜா

கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த திருமதி நேசரட்னம் நவரட்ணராஜா நேற்றுக் காலமானார்.

இவர் காலஞ்சென்ற நவரட்ணராஜா [ஆசிரியர்] அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சிற்றம்பலத்தின் அன்புச் சகோதரியும், பாலேந்திரா [கணக்காளர், லண்டன்], சரோஜினி, லலிதா [லிகிதர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை] ஆகியோரின் அன்புத் தாயாரும், சாந்தி [லண்டன்], புவனேந்திரன் [வைத்திலிங்கம் அன் கம்பனி], சோதிராஜா [பொறியியலாளர், நீர்ப்பாசனத் திணைக்களம், ஒட்டுசுட்டான்] ஆகியோரின் அன்பு மாமியும், கிருசாந்தி, ஜஸ்மின், கோபிகா, வசிகரன், கஜந்தி ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை (22-03-1990) மாலை 4-00 மணிக்கு கோண்டாவில் கிழக்கிலுள்ள ''நேசஸ்தான்'' இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்;
குடும்பத்தினர்
''நேசஸ்தான்''
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

[7465]

### திருமதி தங்கரத்தினம் நல்லையா

காலஞ்சென்ற வர்த்தகர் (ஹற்றன்) நல்லையாவின் அன்பு மனைவி காலமாகிவிட்டார்.

இவர் சற்குணானந்தன், மகாலட்சுமி, யோகலட்சுமி, மயூரானந்தன் ஆகியோரின் தாயாரும், ஜெகநாதன் (நில அளவையாளர்), யோகேந்திரன், திவ்ய ஜெனி ஆகியோரின் மாமியாரும், பிரியதர்சினி, சுபாகரன், வினோ, கிரி, குமரன், தர்ஷி ஆகியோரின் பேத்தியும் ஆவார்.

ஈமக்கிரியைகள் இன்று நண்பகல் 1-00 மணியளவில் அன்னாரது உரும்பராய் சிவன் வீதி இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் இளங்காடு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
M. A. ஜெகநாதன்
சிவன் வீதி,
உரும்பராய் கிழக்கு,
உரும்பராய்.

[12125]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர்வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 22 - 03 - 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org